அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர் 4
இதழ் 11
விலை அ. 4

Page. No - 521.
நந்தன ஞு மாசி மீ
பிப்ரவரி—மார்ச்—1953
Acc. No. 18581.

வருட சந்தா
ரூ. 2-4-0

தாருகாவன முனிவர்கள் அபிசார வேள்வியி லெழுந்த கடும்புலியை, சிவனைக் கொன்றுவர என்று தூண்டுகின்றனர்.

(கந்தபுராணச் சித்திர விளக்கம்—45)

பொருளடக்கம்

			பக்கம்
1.	அழுகை	(திருப்புகழ் மணி) ...	481
2.	சேக்கிழார் செய்தது	(இளவழகனார்) ...	484
3.	வேலவரும் தமிழும்	(ஸ்ரீ வத்ஸன்) ...	489
4.	கண்ணீர்	(V. R. G.) ...	495
5.	கீதையின் சாரம்	(K. S. சுந்தரமூர்த்தி) ...	501
6.	பிறப்பின் பயன்	(மு. பொன்னையாப் பிள்ளை) ...	507
7.	அதிசயம் அநேகமுற்ற பழநி	(சே. த. இராமலிங்கம் பிள்ளை) ...	510
8.	வெற்றிக் கொடித்தூண்	(ரசபதி) ...	516
9.	God and man	(Thiruppugal Mani) ..	526

'அமிர்தவசனி' சந்தா அறிக்கை

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருட சந்தா உள்நாட்டிற்கு இலங்கை உள்பட, ரூ 2—4—0. நான்கு வருட சந்தா ரூ. 8—4—0 அயல்நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 3—0—0. நான்கு வருட சந்தா ரூ 1—0—0.

பத்திரிகையை வி. பி. யில் அனுப்புகிறதில்லை. சந்தாவை சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே அனுப்பி வைக்கவும்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

For **PAPERS** INDIAN & FOREIGN

NEWSPRINT — CREAMLAID — PRINTING BOND — TISSUE — BUTTER — POSTER — ART KRAFT — BOARDS, ETC., ETC.,

Deccan Blue Match, Tea wrapper & Duplicating paper available any quantity

P. S. N. M. Ramalingam Chettiar & Co.

46, ANDERSON STREET, MADRAS-1

PHONE: 55004 - POST BOX 1563 - GRAMS: "DRAWING"

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 4	நந்தன ௵ மாசி ௴ பிப்ரவரி—மார்ச்—1953	இதழ் 11

அழுகை

(திருப்புகழ்மணி)

ஆயுள் காலம் முழுதும் மானிடனுக்கு அழுகையும் சிரிப்புமாக முடிந்துவிடுகின்றது என்று ஒரு கவி கூறுகின்றார். ஆகையால் எடுத்த பிறவியை நல்ல வழியில் பயன் படுத்திக் கொள்ளுவதற்கு, நன்றாய் அழத் தெரியவேண்டும்; சிரிக்கவும் தெரியவேண்டும். முருகன் சரவணப் பொய்கையில் பிறந்தார். பிறப்பற்ற பரம்பொருள் பிறந்த விசேஷத்தால் அழுதாராம். உமையம்மை முலைப்பால் அருந்திய பின் அறுவர் கார்த்திகேயர்கள் கொங்கை விரும்பி அழுதாராம். இவர் அழுகுரல் கேட்ட அசுரர்களும் மற்றவையும் அழலுற்றனவாம். 'சூரழ குன்றழ கடலழ விம்மி யழும்

பெண்டு பிள்ளை தந்தைதாய் பிறவியுடன் சுற்றமிவை
உண்டென்று நம்பி யுணர்வழிந்தேன் பூரணமே

குழந்தை' என்று கந்தரலங்காரத்தில் அருணகிரி யார் வகுத்தார். குழந்தையின் பிரசுரம் அழுகை தான். அழுகையைக் கேட்டு குழந்தை பிறந்து விட்டது என்று அறிந்த தாய் மனமும் தகப்பன் மனமும் ஆனந்தக் கடலில் மூழ்கி விடுகின்றது. உலகத்தின் கொடுமைகளைப் போக்கி உலகை க்ஷேமத்தை நிலைநிறுத்த வந்திருக்கும் கந்தன் அழுகுரல் கேட்ட தீவினையான அசுர வியக்திகள் எல்லாம் அரண்டு அழலுற்றதாம். பிறந்த குழந் தையின் அழுகுரல் மங்களகரம்தான். அழுவதால் உலகுக்கும் நமக்கும் மங்களம் உறுமாறு அழுதல் வேண்டும். இவ்விதம் பிறந்த முருகன் அழுதானும்.

ஆணவ சொரூபமான சூரபத்மன் தன் முடிவு கிட்டியது என்று நினைந்து அழுதானும். க்ரௌஞ் சம் எனும் மாயாக் குன்றும் அழுததாம். பேதம் எனும் துன்பமயமான ஸம்ஸாரக் கடலும் அழுத தாம். இப்படியல்லவோ தீமை அழ ஒருவன் அழல் வேண்டும். தொண்டர்கள் அப்படி அழுவார்கள். அழாத தொண்டர்கள், தாம் அழவில்லையே யென்று நினைந்து நினைந்து அழுவார்களாம். கந்தரலங் காரத்தில் உபதேசிக்கின்றூர். "படிக்கின்றிலை பழனித் திருநாமம்....பரமானந்தம் மேற்கொள விம்மி விம்மி நடிக்கின்றிலை நெஞ்சமே, தஞ்சமேது நமக்கு" என்றூர். ஆனந்தத்திலே அனுபூதியின் மேலீட்டி டிலே தொண்டன் அழுவான். விழுநீர் ஆருக அழுவார்கள் பக்தர்கள். ஆனல் அது துன்பத்

தண்டிகைப்பல் லக்குடனே சகலசம் பத்துகளும்
உண்டென்று நம்பி யுணர்வழிந்தேன் பூரணமே

திலன்று. இன்பத்தின் உருக்கத்திலேதான். ஆண்டவன் அன்பில் உண்டாவது ஒருவனுக்கு இன்பமே. அநித்ய உலகப் பொருளிலே விளைவது துன்பம். கடவுள் அன்பிலே, உலகமக்கள் அன்பிலே விடும் கண்ணீர் ஜீவிதக் கண்ணீர். உலகத் துன்பத்தை மாற்றிடும் ஆனந்த மழை. ஆசையிலே, ஆணவத்திலே குறைவிலே விடும் கண்ணீர் விஷநீராகும். "தெருவுதோறும் அலறிலை" என்றார் மேலோர். பொருளை இச்சித்து அழாமல் அலறாமல் ஆண்டவன் அன்பினால் அலறினால், ஆண்டவன் தொண்டருக்கு எது ஆகவேண்டுமோ அதைத் தந்து உதவுவான். "வேண்டிய போதடியார் வேண்டிய போகமது வேண்ட வெறாதுதவு பெருமாள்" ஆதலின், வேண்டுவன அருள்வான்-ஏதாவது அருள்வான். நமக்கு வேண்டுவது எது என்பதை நாம் அறியோம். தெய்வம் அறியுமாதலால் ஏதாவது தாவென்று கேட்டால் போதுமே. "எவை எவை யுற்றவை அவை தருவித்தருள் பெருமாளே"என்பது திருப்புகழ். எது ஆகாததோ அதைத் தராமல், எது ஆவதோ அதைத் தந்திடுவான்; ஏதாவது தந்திடுவான். மனமே ஆண்டவனை நினைந்தழு. மண்ணை நினைந்தழுதாய். பொன்னை நினைந்தழுதாய். பெண்ணை நினைந்தழுதாய். போகத்தை நினைந்தழுதாய். துன்பக் கடலில் மூழ்கினாய். இனி யழுவதற்கு ஒன்றுமில்லையே! பேரின்பத்தை, தெய்வத்தை நினைந்து அழுவதுதான் பாக்கிநிற்கின்றது. இந்த அழுகையில்தான் ஆனந்தம்

எத்தனை தாய் தந்தை யிவர்களிடத் தேயிருந்து
பித்தனாய் யானும் பிறந்திறந்தேன் பூரணமே

இன்பம் பேரின்பம் நிற்கின்றது. நித்யத்வம் உறைவது. இனி இந்த அழுகையை எடுத்துக் கொள். நல்லவேளை. முக்தி யடைவாய். முருகனைப் பெறுவாய். இது உண்மை. என்று தொண்டர்கள் கூறுவார்கள்!

சேக்கிழார் செய்தது

(இளவழகனார்)

(412 - ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தொண்டத் தொகையின் அடிப்படையிலே தான் சேக்கிழார் பெரியபுராணம் செய்தது என்பது எல்லார்க்கும் தெரியும்.

வன்றொண்டர் பரவையாரது திருமணம், திருத்தொண்டத் தொகையை ஈன்றது; அதாவது, யோகம் ஞானத்தை ஈன்றது. அடியார்க்கு அடியராதலாகிய ஞானத் தெளிவுதான் திருத்தொண்டத் தொகையின் வெளிப்பாடு!

அது, தமிழகத்தில் பெரியதொரு நற்புரட்சியை உண்டாக்கியது. 'திருத்தொண்டத் தொகை' என்னும் ஒரு திருப்பதிகம், திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் மற்றொரு தமிழ்மாலையை எழுப்பி, 'திருத்தொண்டர் புராணம்' என்னும் சேக்கிழாரது பெரிய செந்தமிழையும் பெருக்கெடுத்தோடச் செய்துவிட்டது!

இச் செந்தமிழ்ச் சிவஞான வெள்ளம், தமிழகத்தின் இருகரைகளும் புரளப்பாய்ந்து, சிவபத்தி அடியார் பத்திகளாகிய திருநெறிப் பயிர் விளைத்து, இடைக்காலத்தில்

செம்பொற் கமலத் திருவடியைப் போற்றுமல்
பம்பை கொட்ட ஆடும் பசாசானேன் பூரணமே

தமிழகத்தைத் தெய்வப் பேருணர்வில் மிகவுஞ் செழிக்கச் செய்துவிட்டது.

இன்னும் இந்நாட்டில், அது செய்துவரும் வியக்கத் தக்க பத்தி அலைகளாலேதான், வன்மனங்கள் மென்மனங் களாய்ப் பதம்பெற்று வருகின்றன! ஈவு இரக்கம் நடமாடி வருகின்றன! அங்கும் இங்குமாக ஓரளவிலாயினும் 'முறைமை' 'ஒழுங்கு' என்பன இடம்பெற்று வருகின்றன. நாளும் இங்ஙனம் நடைபெற்று வரும் உயிர்ப்புடையது இது!

இவ்வளவுக்குங் காரணம், 'தென்தமிழ்ப் பயனாய் உள்ள திருத்தொண்டத்தொகை' என்று அறியும்போது தான், திருத்தொண்டத் தொகையின் மாட்சி உள்ளத்தை அள்ளிக் கொள்ளை கொள்கின்றது. இதனாலன்றோ, இதனை அருளிச்செய்த நம்பியாரூரர் சைவ 'முதல் திருத் தொண்டர்' என்று கூறப்பெற்றார்; ஏனைய திருத் தொண்டர்களுக் கெல்லாம் கிடைக்காத உரிமை நிலையாகிய 'தம்பிரான் தோழர்' என்னும் பெருநிலையும் ஆரூரார்க் குக் கிடைத்தது. தமிழின் பயன் 'திருத்தொண்டு' 'மன் பதைத் தொண்டு' என்னும் தமிழ்மாண்புகளும் புலப் பட்டன! இதனாலன்றோ, நங்கை பரவையாரது தமிழ் முறைத் திருமணமும் இவ் வெளிப்பாட்டுக்கு இன்றி யமையாத தாயிற்று!

தமிழகத்தில் நேர்ந்த தெய்விகப் பெரும்புரட்சிக்குக் காரணம் திருத்தொண்டத் தொகையேயாக, அத் திருத் தொண்டத் தொகையின் வெளிப்பாட்டுக்குக் காரணம், நங்கை பரவைக்கும் நம்பி ஆரூரர்க்கும் அமைந்த தெய் விகக் கூட்டுறவே என்று அறியும்போது, காதலும் மண

குருவாய் பரமாகிக் குடிலைசத்தி நாதவிந்தாய்
அருவா யுருவான தறிகிலேன் பூரணமே

மும் வாழ்க்கையுமென்றால், இப்படியல்லவா பெரும்பயன் உண்டாக நிகழவேண்டும் என்று வியப்பும் ஈடுபாடும் யார்க்கும் உண்டாகக் கூடும். கயிலையி லிருந்து தென்தமி ழகம் வந்து வாழ்ந்த அவர்கள், வந்த இடத்துக்கு அழி யாத பெரிய நன்மையே செய்து சென்றார்கள்!

நம்பியாரூரர் பரவையாரைத் திருமணம் செய்து கொண்டபின் தெய்வ அன்பு, பின்னும் முதிர்ந்து அடியார் அன்பாகப் பெருகியது. தாயின் கனிவு குழந்தையாதல் போலவும், அன்பின் முதிர்ச்சி அருள் ஆதல் போலவும், ஈசனுக்கு அன்பு அடியார்க்கு அன்பாக ஓங்கித் தழைக்க லாயிற்று! திருமணம் என்பது அன்புத்திறம்! திரு மணம் செய்துகொண்டபின் அதன்பயனைச் செய்யும் மன் பதைத் தொண்டு, அதாவது அடியார் பெருமக்களின் தொண்டு என்பது அருள் திறம்! திருமணங் கூடுகிற வர்கள் அடியார்க்கு அடியராதலாகிய இவ் அடியார் பத்தி யில் தலைப்படும் தொண்டுடையராதல் வேண்டும். இதற் காகவே பரவையார் திருமணத்தை முன்னால் முடிப்பித் துப் பின்பு திருத்தொண்டத் தொகை வெளியீட்டையும் இறைவன் நிறைவேற்றி யருளினார்!

தன்னையா ளுடையபிரான் சரணார விந்தமலர்
சென்னியிலும் சிந்தையிலும் மலர்வித்துத் திருப்பதிகம்
பன்னுதமிழ்த் தொடைமாலை பலசாத்திப் பரவையெனும்
மின்னிடையா ளுடன்கூடி விளையாடிச் செல்கின்றார்.

மாதுடன் கூட வைகி மாளிகை மருங்கு சோலை
போதவிழ் வாவிமாடு செய்குன்றின் புடையோர் தெற்றிச்
சீதளத் தரளப் பந்தர்ச் செழுந்தவி சிழிந்து தங்கள்
காதல்பூங் கோயில் நண்ணிக் கும்பிடும் விருப்பால் நம்பி—

ஒளியாய்க் கதிர்மதியா யுள்ளிருளாய் அக்கினியாய்
வெளியாகி நின்ற வியனறியேன் பூரணமே

கண்ணுதல் கோயில் தேவா சிரியனுங் காவணத்து
விண்ணவர் ஒழிய மண்மேல் மிக்கசீர் அடியார்கூடி
எண்ணிலார் இருந்த போதில் இவர்க்குயான் அடியேனாகப்
பண்ணுநாள் எந்நாள் என்று பரமர்தாள் பரவிச் சென்றார்.

என்னுஞ் சேக்கிழார் செம்மொழி மணிகள், மேற் கூறிய பொருட் கோவையில் இணைந்து செல்லுதல் தெளிந்து கொள்ளப்படும்.

நிகழ்வனவெல்லாம் சான்றோர்க்கு இறைவன் திருவருளால் அமைதலின், திருத்தொண்டர்க்கு அடியராதலும் ஆண்டவன் திருவருளால் அமைய வேண்டுமெனக் கருதி, ஆரூரர், 'இவர்க்கு யான் அடியேனாகப் பண்ணு நாள் எந்நாள் என்று பரமர் தாள் பரவிச் சென்றார்! தகுதியறிந்து அவ்வப்போதும் அமைய வேண்டுவன அமைத்துவரும் இறைவனும், அடியார்களின் திருத் தொண்டுகளையும் பெருமைகளையும் நம்பியாரூரர்க்கு விளக்கி யருளினார். இறைவன் வாக்காக அடியார்களின் பெருமைகளைச் சேக்கிழார் பின்வருமாறு சிறப்பித்தார்.

பெருமையால் தம்மையொப்பார், பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார், ஊனம்மேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார், அன்பினால் இன்பம் ஆர்வார்,
இருமையும் கடந்து நின்றார் இவரைநீ அடைவாய் என்று.

அடியார்களின் இணக்கத்தை 'ஏதம் தீர்' என்று நம்பிகள் போற்றிக் கொண்டார். அடியார்க்கு அடியராதல் என்பது பழுதற்ற நெறி என்பது மட்டுமன்று; அதற்குமேற் பெறுவதென்பது வேறில்லை என்னும் நிறைவு நிலையுமாம்; கண்டுகொள் எனத் திருத்தொண் டத் தொகை என்னுந் திருப்பதிகத்தை இறைவனே 'நிறைசொன் மாலை' என்று அருளிச் செய்தார்.

இடையாகிப் பிங்கலையாய் எழுந்த சுழுமுனையாய்
உடலுயிராய் நீயிருந்த உளவறியேன் பூரணமே

'நிறைசொன் மாலை...பாடு' என வன்றொண்டப் பெருமானை இறைவனே வேண்டிப் பெற்ற பதிகம் திருத்தொண்டத் தொகை! மறையளித்த திருவாக்கால், 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று முதல் அடி எடுத்துக் கொடுத்து இசைப்பாடல் மொழி என்று இறைவன் கேட்டதற்கேற்ப, வன்றொண்டர்,

> தாரத்தே திருக்கூட்டம் பலமுறையில் தொழுத அன்பு
> சேரத்தாழ்ந் தெழுந்து அருகு சென்றெய்தி நின்று, அழியா
> வீரத்தார் எல்லார்க்கும் தனித்தனி வேறு அடியேன் என்று
> ஆர்வத்தால் திருத்தொண்டத் தொகைப்பதிகம் அருள்
> [செய்வார்.

என்பது தெரிதலினால், 'திருத்தொண்டத் தொகைப் பதிகம்' சிறந்த இசைத் தமிழ்ப் பதிகம் என்று தெரிகின்றது. ஆரூரர் மொழிந்த தமிழ் முறையே பின்பு திருத்தொண்டர் புராணம் எழுந்தது. 'தம்பிரான் தோழரவர் தாம் மொழிந்த தமிழ் முறையே, எம்பிரான் தமர்கள் திருத்தொண்டு ஏத்தலுறுகின்றேன்' என்று இவ்வுண்மையைச் சேக்கிழார் பெருமானே தடுத்தாட்கொண்ட புராணத்தின் இறுதிச் செய்யுளால் தெளிவாகக் கூறுகின்றார். இதனால், சேக்கிழார் செய்த பெரிய புராணத்துக்கு மூலம், நம்பியாரூர் அருளிச்செய்த மிகச் சுருங்கிய ஒரு திருப்பதிகமே யல்லாமல் வேறு விரிந்த பெருநூல்கள் எவையுமல்ல என்பது நன்கு தேறப்படும்.

'தென்தமிழ்ப் பயனாயுள்ள திருத்தொண்டத் தொகை' எனபதுஞ் சிறப்பிக்கப் படுதலால், நல்லாரிணக்கமாகிய அடியாருறவு என்னும் பேறாமே தென்தமிழின் பயன் என்பதும் இனிது தெளியப்பெறும்.

ஆணாகிப் பெண்ணா யலியாகி வேற்றுருவாய்
மாணாகி நின்ற வகையறியேன் பூரணமே

அத்தகைய தமிழ்க் கொள்கையாகிய, அதாவது தமி ழின் பொருளாகிய, அதாவது தமிழகத்தின் நாகரிகமாகிய தமிழ்ப் பேறத்தைத் தூய நன்னிலையி லிருந்து விரித்து விரித்துச் சேக்கிழார் பெருமான் இயற்றி வழங்கி யருளிய பெரிய புராணம் என்பது, எவ்வளவு இப்பழம் பெரு நாட்டுக்குப் புதுப் பெருநிதியம் !

(தொடரும்)

வேலவரும் தமிழும் (4)

(ஸ்ரீவத்ஸன்)

உமா தேவியாரின் திருமணத்தைக் கண்டு களிக்க பிரமாதி தேவர்கள் வந்தனர். ஏகாதச ருத்திரர்கள், உருத்திர கணங்கள், பூத கணங்கள், நக்ஷத்திர தேவதை கள், பிராம்மி முதலிய தேவ மாதர்கள், அஷ்ட வசுக்கள், சமுத்திர தேவர்கள் முதலியோரும் வந்தனர். புகழ் பெற்ற வேதங்களாலும் ஆகமங்களாலும் துதிக்கப்படும் சிவபிரானும், தன் பொன் மயமான இருப்பிடத்தை விட்டு இடப வாகனத்தில் புறப்பட்டதை யாவரும் கண்டு மகிழ்ந்தனர். விநாயகக் கடவுள் தம் பரிவாரங்களுடன் எதிர் வந்து வணங்கி முன்னே சென்றுர். பேரிகை, வலம் புரிச் சங்கு, சல்லரி, காடிகை, பீல், உடுக்கை, மத்தளம், எக்காளம், கடாரி முதலிய வாத்தியங்கள் முழங்க, மற்ற தேவர்களும் தத்தம் வாகனங்களில் ஏறி வந்தனர்.

மணக் கோலம்

அழகாக அலங்கரிக்கப்பட்ட வீதிகளின் வழியாக தீபத் தட்டுகளை ஏந்தி நகர மாதர்கள் முன் செல்ல,

---

வாலையாய்ப் பக்குவமாய் வளர்ந்துகிறுந் தானுகும்
பாலையாய் நின்ற பயனறியேன் பூரணமே

பர்வத ராஜன் சிவபிரானையும் கணங்களையும் எதிர் கொண்டு அழைத்து உபசரிக்க, யாவரும் மணப் பந்தலை அடைந்தனர். விசுவகர்மாவினால் நிர்மாணிக்கப் பட்ட அப்பந்தல் யாவராலும் மெச்சப்பட்டது. இடப வாகனத் தினின்றும் இறங்கிய சிவபிரானின் பாதங்களை, பர்வத ராஜனை முன்னிட்ட தேவ மாதர்கள் பாலைக் கொண்டு அபிடேகித்து உபசரித்தனர். வாத்தியங்கள் முழங்க, தேவர்கள் துதிக்க, வித்தியாதரர்கள் பாட, சிவ கணங் கள் ஆரவாரிக்க, ருத்திர கணங்கள் சூழ, இந்திர நீலக் கல்லால் நிர்மாணிக்கப்பட்ட ஆசனத்தில் சிவபிரான் அமர்ந்தார்.

இமயம் தாழ்தல்

அச்சமயம் திடீரென்று இமயம் நடுங்கிற்று. பூமி யின் தென் பாகம் உயரத் துவங்கிற்று. பூகம்பம் என யாவரும் பயந்தனர்.

சிவ கட்டளைப்படி நந்திகேசுவரரால் அகத்தியனாரும் வரவழைக்கப்பட்டார். வந்தவரை நோக்கி, பெருங் கூட் டம் கூடியது பற்றி இமயம் சற்று தாழ்ந்துள்ளது. தாம தியாது தென்புறம் சென்று பொதிகையை யடையக் கடவீர் என்ற சிவ கட்டளை ஏற்பட்டது. ஆச்சரிய மடைந்த அகத்தியனாரும், பிதாவே, யாதொரு குற்றமும் புரியாத அடியேனை இங்கே யிருவென்று கூறுது, அப் புறம் செல்லென்ற கட்டளை ஏனோ பிறந்தது என்று வேண்டி நின்றார். ஒப்பற்ற முனிவ, யாம் கூறியபடி செய்கவென, முனிவரும் அப்படியாயின் இத் திருமணக் காட்சியை யான் இழக்க நேருமே என்று வருந்துகிறேன் என்றார். சிவபிரானும் களிகூர்ந்து, அஞ்சற்க, இம் மணக்

பொய்யாய்ப் புவியாய் புகழ்வா ரிதியாகி
மெய்யாகி நின்ற வியனறியேன் பூரணமே

கோலக் காட்சியை அங்கு தருவம்; பொதிகை செல்லுக வென்றனும், அகத்தியனாரும், நீங்க மனமில்லாவிடினும் சிவ கட்டளையை மீற விருப்பமில்லாது, கடிதில் புறப் பட்டுப் பொதிகையை யடைந்தனர். பிறகு பூமியும் ஒரு நிலைப்பட, யாவரும் கலக்கம் நீங்கி சிவபிரானைத் துதித்து நின்றனர்.

திருமணம்

அவ்வமயம், தாமதமின்றி, பர்வத ராஜனும், சரஸ்வதி, லக்ஷ்மி மற்றும் தேவ மாதர்கள் சூழ உமாதேவி யாருடன் கூட மண மண்டபம் வந்தனன். சந்தனம் முதலிய உபகரணங்களுடன் மேனு தேவியும் பர்வத ராஜனும் சிவபிரானைப் பூசித்து, உமாதேவியின் திருக்கரங்களைப் பற்றி, சிவபிரானின் திருக்கரங்களில் வைத்து, வாத்தியங்கள் முழங்க, அரம்பைகள் நடனம் ஆட, கந்தர்வர்கள் கானம் செய்ய, தும்புராதி முனிவர்கள் கீதங்கள் பாட, தேவர்கள் ஆரணங்கள் ஓத, தேவ மாதர்கள் மங்கள வாழ்த்துக்கள் முழங்க, எமது புத்திரியை தேவரீருக்கு அன்புடன் கொடுத்தோம் என்று நறுமணங் கமழும் நீரை வார்த்தனர். யாவரும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் பெருமித ஆரவாரம் செய்தனர்.

பர்வத ராஜனும், மா, பலா, வாழை, தேன், நெய் முதலிய மதுர வகைகளை சிவபிரானுக்கு அளிக்க, பசி, பிணி, மூப்பற்ற எமது சிவபிரானும் தம் திருக்கரத்தால் அவற்றைத் தொட்டு, யாம் மகிழ்ந்தோம். நீ இவற்றை எடுத்துக் கொள்ளக் கடவை யென்றனர். பரிசுத்த மடைந்த அம் மதுர வகைகளைப் பர்வத ராஜன் தாமும் பெற்று, மற்றவர்கட்கும் அளித்தனன். திருமணச் சடங்

பூவாய் மணமாகிப் பொன்னாகி மாற்றாகி
நாவாய்ச் சொல்லான நயமறியேன் பூரணமே

காகவுள்ள மற்றவைகளையும் சிவபிரான் முடித்துவைத்து, உமாதேவியாருடன் இடப வாகனத்தில் யாவருக்கும் காட்சியளித்தார். அதைத் தரிசித்த யாவரும் தத்தம் பிறவிப் பயனை அன்றே யடைந்ததாகக் கருதி ஆனந்தத்தி லமிழ்ந்தனர்.

மன்மதன் உயிர் பெறல்

தருணமிதுவே யெனக்கண்ட இரதிதேவியும், சிவபிரான் முன் தோன்றி விண்ணப்பித்து நின்றாள். சிவ கட்டளைப்படி மன்மதன் தோன்ற, இரதியும் மகிழ் வெய்தினள். மன்மதனும் சிவபிரானை வணங்கித் தான் இழைத்த குற்றத்தை மன்னித்தருள வேண்டினான். சிவ பிரானும், அக்கினி யுருக்கொண்ட தம் நேத்திர நோக்கால் சாம்பலாய்ப் போன சரீரமானது பற்றியும், இரதியின் வேண்டுகோளின் மேல் உருப் பெற்றது பற்றியும், இனி அவ்வுடல் அவளுக்கு மட்டில் உருவமாகவும், மற்றவர் கட்கு அருவமாகவு மிருக்கக் கடவது என்றருளிச் செய்ய, களிப்படைந்த அவ்விருவர்களும் அவ்விடம் விட்டு வணங் கிச் சென்றனர்.

சிவபிரான் உமாதேவியாருடனும் மற்றைய கணங் களுடன்கூட திருக்கயிலையை யடைந்தனர். பிரமாதி தேவர்களும் தத்தமிடம் சென்றனர். விநாயகரும் விடை பெற்றுத் தம் கணங்களுடன் கூடச் சென்றனர்.

தேவர்கள் பிரார்த்தனையும் தீப்பொறிகள் தோன்றலும்

இப்படி சிலகாலம் கழிந்தது. தேவர்கள் சிந்திக்க லாயினர். சூரபதுமன் கொடுமை நீங்க ஓர் புத்திரப் பேற்றை வேண்டினோம், திருமணம் ஆயிற்று. சிவநிலை யாது எனத் தெரியவில்லை. ஓர் தூதுவனை அனுப்பி

பொறியாய்ப் புலனகிப் பூதபே தப்பிரிவாய்
அறிவாகி நின்ற அளவறியேன் பூரணமே

விபரம் அறிதல் முறை யெனக் கருதி வாயு தேவனை வேண்டினர். முன்பு அரனெதிரில் சென்ற மன்மதனின் கதியை மனதில் எண்ணி தான் செல்ல முடியாது என்றனன். மெய்வருத்தம் பாரார் என்றபடி ஓர் நற்காரிய நிமித்தம் தன் உயிரைப் பொருட்படுத்துவது சுத்த வீரர்கள் வழக்கமல்ல. ஆகவே வாயுதேவன் சென்று வருதலே முறை யெனத் தேவர்கள் கூற, அவனும் அவ்வாறு சென்றனன். சென்ற அவன் நந்தி தேவரால் தடுக்கப்பட்டு திரும்பினன். தேவர்கள் இனி காமே சென்று வருதல் முறை யென்று கருதி யாவரும் ஒருங்கே சிவ சந்நிதியை யடைந்து சிவபிரானைப் பலவாறுகத் துதித்துத் தோத்தரிக்க ஆரம்பித்தனர். நந்திகேசுவரர் மூலம் விபரம் அறிந்த உமாதேவியுடன் கூடிய சிவபிரானும், உங்கள் துதியை மெச்சினோம். வேண்டும் வரம் யாது என்று வினவினர். தேவர்களும் திருமணம்ஆனதும் புத்திரப்பேறின் நிமித்தமன்றோ என்று விண்ணப்பிக்க, புத்திரனை யளிப்போம் என்று கூறிய சிவபிரானும், ஈசானம், தற்புருடம், வாமதேவம், அகோரம், சத்தியோசாதம், அதோமுகம் என்ற ஆறு முகங்களுடனும் ஆறு நெற்றிக் கண்களுடனும் ஓர் அதி அற்புத ரூபமாகத் தோன்றினர். அந்த ஆறு கண்களிலிருந்தும் தீப்பொறிகள் கிளம்பின. யாவரும் கண்டு வியந்தனர், பயந்தனர், பொறிகளின் ஜுவாலை எங்கும் வியாபித்தது. வெப்பம் தாங்கமாட்டாத தேவர்கள், ஓர் புத்திரனை வேண்டப் போக எத்துணை இன்னல்கள் ஏற்படுகின்றன. சீக்கிரமே தாங்கள் ஒருமுகத்தோடு கடாக்ஷிக்க வேண்டும் என்று பிரார்த்திக்க, சிவபிரானும் அவ்வாறே ஒருருக் கொண்டு விளங்கினர்.

வானிற் கதிர்மதியாய் வளர்ந்துபின்னுன் றுனதுபோல்
ஊனுடலுக் குள்ளிருந்த உயிர்ப்பறியேன் பூரணமே

அந்த ஆறு தீப்பொறிகளும் அவரிடம் திரும்ப வந்தன. அச்சமயம் வாயு தேவனையும் அக்கினி தேவனை யும் பார்த்து, நீங்கள் இப்பொறிகளை கங்கையில் விடக் கடவீர். அது சரவணப் பொய்கையைச் சேரும் என் றனர். சிவ கட்டளையை மீற விருப்பமில்லாத அவர்கள், அப்பொறிகளைத் தாங்க சக்தியைப் பெற்றுப் பின்னர் சுமந்து சென்றனர். ஒருவாறு தேவர்கள் அச்சம் நீங்கி, இப்பொறிகள் சரவணப் பொய்கையை யடைந்ததும் ஓர் குழந்தை யுருப்பெற்று, தேவர்கட்கு உதவிபுரியும் என்ற சிவ வாக்கைக் கேட்டு ஆனந்தித்து தத்தம் இருப்பிடம் சென்றனர்.

தீப்பொறிகளைச் சுமந்து செல்லலும் ஆறுமுக உற்பவமும்

வாயு தேவனும் அக்கினி தேவனுமாக மாற்றி மாற் றித் தீப் பொறிகளைச் சுமந்து சென்றனர். செல்லச் செல்ல பளு அதிகரித்துக் கொண்டே யிருந்தது. இனியும் சுமக்க இயலாது என்று எண்ணும் நிலையில் கங்கைக் கரையை அடைந்தனர். அப்பொறிகளும் கங்கா நதியில் விழுந்தன. விழுந்ததும் அவைகள் நீரோட்டத்தில் செல் லச் செல்ல நீர் வற்றிக் கொண்டே வந்தது. கடைசியாக முன்பு உமா தேவியார் தாமரை இலையின் மேல் தோன் றிய இடத்திற்கு வந்தபின், நீர் வற்றுவது நின்றது. பொறிகளும் அவ்விடத்தை யடைந்ததும் திடீரென்று ஆறுமுகம் பன்னிரு கைகளும் சுந்தர வடிவமுள்ள ஓர் அதிசயக் குழந்தையாக மாறியது.

பிரமாதி தேவர்கள் ஆரவாரித்தனர். சுந்தரக் குழந்தையின் உற்சவத்தை யாவரும் கொண்டாடினர். திருமால் முதலிய தேவர்கள் வேண்டுகோளின்படி

பொய்யும் புலையுமிகப் பொருந்திவின் பேசலன்றி
ஐயோ உனையுரைக்க அறிகிலேன் பூரணமே

கார்த்திகை முதலிய ஆறு பெண்களும் அக்குழந்தையை வளர்க்கத் துணிந்தனர். அப்பெண்கள் அக்குழந்தையை ஸ்பர்சித்ததும் ஒரு குழந்தை ஆறுருவாக மாறிற்று. அவர்களும் அக்குழந்தைகளைத் தனித்தனியாக வளர்த்து வந்தனர்.

ஒருமுகம் சிரிக்கும், ஒன்று அழும், ஒன்று துதிக்கும். தனிப் பிறவியோடும் தவப் பிறவியல்லவா. வானவர்கள் போற்றும் அவைகள் செவ்வனே வளர்க்கப்பட்டு வந்தன.

இக் குழந்தைகள் யாவும் ஓரே உடல் இரு கால்கள், பன்னிரு கைகள், ஆறுமுகத்துடனும் ஒருருவான அதிசயத்தை அடுத்த இதழில் காண்போம்.

சரவணப் பொய்கையில் முருகன் உற்பவித்த படலம், பிறவித் துன்பத்தை நீக்கி இகபர சாதனங்களை அளிக்க வல்லது என்று சூத புராணிகா தேவர்கட்குக் கூறி முடித்தார்.

கண்ணீர்

V. R. G.

நம் கண்ணில் ஏதாவது தூசி விழுந்துவிட்டால் உடனே கண்ணில் நீர் பெருகி அந்த தூசியை வெளியே தள்ளிவிட்டுத் தான் நிம்மதியடைகிறது. அந்தத் தூசி வெளிவராத வரை கண்ணீர் நிற்பதில்லை. நம் அவயவங்களுள் கண்தான் மிக உன்னதமானதும், கையினால் கூட தொட முடியாத நுண்ணியதாயுமுள்ளது. கண்ணில் தூசியோ மணலோ விழுந்தவுடன், நாம் கண்ணை மூடிக்

வாரிதியாய் வையமெல்லா மன்னுமண்ட பிண்டமெல்லாஞ்
சாரதியாய் நின்ற தலமறியேன் பூரண்மே

கொண்டு பொறுமையுடன் சிறிது நேரம் ஒரு இடத்தில் உட்கார்ந்திருந்தால், திருமுருகன் அருளால் கண்ணைக் காப்பதற்காக உண்டாக்கப்படும் கண்ணீரானது, தன் வேலையைச் சரிவரச் செய்ய ஆரம்பித்து, நீரைப் பெருகச் செய்து, கண் இமைகளை அடிக்கடி இமைக்கச் செய்து, அந்தத் தூசியைச் சிறிது நேரத்தில் கண்ணின் ஓரத்திற்குக் கொண்டு வந்து தள்ளி, உபாதையை நீக்கும். அதன் பின்பு கண்ணீர் பெருகுவது நின்று விடும். பிறகு நம் கை விரலால் கண் ஓரமாய் ஒதுங்கிய தூசியை சுலபமாய் எடுத்து விடலாம்.

நம் உன்னதத் தோழனை கண்ணீர், அதன் வேலையைச் செய்யும் வரை நாம் பொறுமையா யிருப்பதில்லை. அதற்குள் நாம் பொறுமை யிழந்து, நம் கைகளால் கண்களைத் தேய்த்துக் கசக்கி, அதன் வேலைகளைக் கஷ்டமானதாக்கி, நாமும் கஷ்டப் படுகிறோம். மிருகங்கள் பக்ஷிகளின் நிலைகளைப் பற்றிச் சற்று யோஜித்துப் பாருங்கள். அவைகளின் கண்களில் தூசியோ, மணலோ, விழாமலா இருக்கும்? விழுந்தால் உடனே நம்மைப் போல் கண்ணைக் கசக்கிக் கொள்ள கைகள் இல்லையல்லவா! ஆதலால், அவைகளின் கண்ணீரின் வேலை சுலபமாகிறது. தூசி விழுந்த சிறிது நேரத்தில் அது ஓரத்தில் வந்து ஒதுங்கி விடுகிறது. என்னே திருமுருகனின் கருணை! அவர் சிருஷ்டிகளின் விநோதத்தை நம்மால் சிந்தித்து உணர முடியுமா?

கண்ணீரின் உபயோகம் இவ்வளவுதான் என்று நினைக்க வேண்டாம். நம்மில் அளவிட முடியாத அதிர்ஷ்

மனம்புத்தி சித்த மகிழறிவாங் காரமதாய்
நினைவாந் தலமான நிலையறியேன் பூரணமே

டத்தையும், இகபர சௌபாக்கியங்களையும், அளிக்க வல்லது. மனப் பக்குவத்தை அளவிட உரைகல் போன்றது. மனத்தின் கனிவு அன்பு—அன்பின் கனிவு உணர்ச்சி—உணர்ச்சியின் முதிர்ச்சி கண்ணீர். மனம் இளகுவதால் கண்ணீர் உண்டாகும். மனம் இளகாமல் கல்லாய் இருக்கும் சமயம் கண்ணீர் வராது. சகஜமாகப் புருஷர்களை விட, பெண்களுக்கு இயற்கையாகவே நெகிழ்ந்த உள்ளத்தைத் திருமுருகன் அமைத்திருக்கிறார். ஆதலால்தான், அவர்களுக்குக் கண்ணீர் பெருகும் சந்தர்ப்பங்களை அடிக்கடி காண்கிறோம். நமக்கு, அவ்வளவு சுலபத்தில் கண்ணீர் வராது. நாம், வழக்கத்தில், "இவன் எவ்வளவு கல்மனசனாவன் பார்த்தாயா! ஒரு துளி கண்ணீராவது வருகிறதா பார்!" என்கிறோம். ஆதலால் நம் மன நெகிழ்ச்சிக்கும் கண்ணீருக்கும் சம்பந்தம் இருப்பதை நிச்சயமாக அறிகிறோம்.

நாம் நல்ல வழியில் எவ்வளவோ ஈடுபடலாம்— தான தருமங்கள் செய்யலாம்—அநேக க்ஷேத்திரங்களுக்குச் சென்று, திருமுருகனைத் தரிசித்து, அர்ச்சித்து, பூஜித்து, வலம் வரலாம்—உபவாசம், விரதங்கள் இருக்கலாம்—பேசா மௌன விரதமும் அனுஷ்டிக்கலாம். இவைகள் யாவும் திருமுருகன் மனதுக்குகந்த தொண்டுகளே. இருப்பினும், இவைகளுடன் திருமுருகன் நம்மிடம் மிக்க ஆவலுடன் எதிர் பார்த்து விரும்புவது ஒன்று உண்டு! அது தான் மனக் கனிவு. நல்ல விஷயங்களில் நாம் ஈடு பட்டிருந்தாலும், புலனுக்கு வேலை கொடுத்துக் கொண்டிருக்கும் வரை, உண்மையான மனக் கனிவு ஏற்படாது. அந்தப்

உருப்பேத மின்றி யுயர்ந்தசத்த பேதமதாய்க்
குருப்பேத மாய்வந்த குணமறியேன் பூரணமே

புலன்களுக்கு அரை நிமிஷமேனும் ஒய்வு கொடுக்க முடிந்தால் தான், உன்னதமான மனக்கனிவு, அன்பு, உணர்ச்சி விம்மிதம், கண்ணீர் இவைகள் முறையே உண்டாகும். இதைத் தான் திருமுருகன் நம்மிடம் எதிர் பார்த்த வண்ணம் இருக்கிறார்.

'சரண கமலாலயத்தை, அரை நிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க — அறியாத'

என அருணகிரியார் அருளியுள்ளபடி, 'தவ முறை தியானம்' என்பது, புலனடங்கிய மனக் கனிவேயாம். அதை 'அரை நிமிஷ நேரம்' அடைந்தாலும் போதும். 'மருவும் அடியார்கள்' மனதில் விளையாடும் மரகத மயூரனைக் காணலாம்.

திருமுகன் பலே தந்திரசாலி. அத்துடன் கருணைக் கடலாயுள்ளவர். அவர் நம்மிடம் எதிர் பார்த்து விரும்புவது, அன்பு ஒன்றே. அன்பே அமைதி. அமைதியான அன்பே ஆண்டவர் உறைவிடம். நாம் விரும்பும் யாவையும் அளித்துக்கொண்டே யிருக்கிறார். அதற்கு காணிக்கையாய் அவர் நம்மிடம் எதிர் பார்ப்பது—அன்பு ததும்பும் கண்ணீரே! அன்பாகிய கனியின் ரசமே கண்ணீர். திருமுருகன் நம்மிடம் வேறு எப்பொருளையும் வேண்டவில்லை. நாம் ஏழையோ, பணக்காரனோ, திடசாலியோ, மிக எளியனோ, எந்த ஏழ்மையும் இடைஞ்சலுமுள்ள நிலையிலிருந்தாலும், அவர் எதிர் பார்க்கும் அன்பை, இருந்த இடத்திலிருந்து, யாதொரு சிரமமு மின்றி தந்து விடலாம். இதற்கு நாள், நக்ஷத்திரம், பிறர் உதவி, ஒன்றும் எதிர் பார்க்க வேண்டாம். நம்மிடம் எந்த சமயத்தும் தயாரா

வானென்பார் அண்டமென்பார் வாய்ஞான மேபேசித்
தானென்பார் வீணர் தனையறியார் பூரணமே

யிருக்க வேண்டியது—மனக் கனிவு ஒன்றே! இந்தக் காணிக்கை மிக சுலபமானதாய் இருப்பினும், புலன் வசப் பட்டவர்களுக்கு கிடைக்கக் கூடாததா யிருக்கிறது.

மனமே! கண்ணீரின் பெருமையையும், அதனால் அடையக் கூடிய நன்மைகளையும், நன்கு உணர்ந்துகொண் டிருப்பாய். ஆதலால், இனி கண்ணீர நீ வீணில் செல விடாதே!

'வீணில் செலவிடாதே! என்றால் என்ன அர்த்தம் என சொல்கிறேன். கேள்! ஒரு பொருளில் ஆசை வைத் தால் அதன் மேல் அன்பும், மனக் கனிவும் ஏற்படுகிறது. நம் ஆசைக்கு இடையூறு ஏற்படின், நம் மனக் கனிவா னது சோகம் நிறைந்த உணர்ச்சியாக மாறி, கண்ணீரைப் பெருக்கி, வீணாக்குகிறது. நம் திரு முருகனுக் குகந்ததா யுள்ள இந்தக் கண்ணீரையா இப்படி விழலுக்கு வீணாக்கு வது? இந்த மாதிரி சம்பவம் நம் வாழ்நாளில் எவ்வளவோ தடவை நேர்ந்திருக்கிற தல்லவா? ஆதலால், இனிமே லாவது, நம் கண்ணீரை வீணிற்கு இறைக்காமல், திரு முரு கனுக்கு காணிக்கையாகச் செலுத்த வேண்டுமாயின், திரு முருகன் பாத கமலங்களைத் தவிர வேறு எதிலும் ஆசை நீடிக்க விடாது பார்த்துக் கொள்ள வேண்டும். ஆசை படிப்படியாகக் குறையும்படி சாதனை செய்ய வேண்டும். ஆசை குறையக் குறைய, நிம்மதி பெருகிக் கொண்டே வரும். 'ஆசாநிகளம் துகளாயின பின் பேசா அநுபூதி' கூட அடையப் பெறுவோம் என அருணகிரியார் ஆசை காட்டி யுள்ளார்.

ஆதியென்பா ரந்தமென்பா ரதற்குணமி லாதிருந்த
சோதியென்பார் நாதந் தொழிலறியார் நூலறிவே

" ....பரமானந்தம் மேற்கொள விம்மி விம்மி,
நடிக்கின்றிலை நெஞ்சமே தஞ்சமேது நமக்கினியே "

(கந்தரலங்காரம்)

மனக் கனிவு முதிர்வதால் விம்மிதமும் அழுகையும் ஏற்படுகிறது. அச்சமயம் கண்ணீர் ஆறாக ஓடும். இவை யாவும் நம்பிதயத்தி லிருந்தே உண்டாகிறது. சிறு குழந்தைகளிடம் இதை நாம் நன்கு பார்க்கலாம். குழந்தைகள் உள்ளம் பால் போன்றது—புலன்களெனும் கள்வர் வசப் படாதது. ஆகையால், அது எதாவது ஒன்றில் ஆசை வைத்து, அது கிடைக்கா விட்டால், மனம் நெகிழ்ந்து, தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விடும்—இதயம் விம்மி விம்மி எழும்—கண்ணீர் பெருக்கெடுத்து ஓடும். கொஞ்ச நேரம் அழுத உடனேயே அது இச்சித்த பொருள் அதற்குக் கிடைத்து விடும்.

அதே போல், நாமும் குழந்தைகளைப் போல, பாசமற்ற, கனிந்த இதயமுள்ளவர்களாகி, திருமுருகனிடம் நீங்காத ஆசை வைத்து, அவன் இணையடிகளை சதா நம் இதயத்து நேசித்து, அன்பு பூண்டு, பக்தி மேலிட்டு அவனைக் கண் குளிரக் காண வேணும் எனும் ஆசை பூண்டு, அன்பு பெருகி, உணர்ச்சி வசப்பட்டு, நம் ஆசை நிறைவேறுவதற்காக, பச்சிளங் குழந்தையைப் போல விம்மி விம்மி அழுது, அன்பு நிறைந்த கண்ணீரை அவனுக்குக் காணிக்கையாக அளிப்போமாயின், அன்றே நல்ல நாள்! நம் இன்னல் களையும் நாள்!! நாம் பெறுதற்கரிய பிறவியைப் பெற்றதின் பேற்றை அடையும் நாள்!!! இக

முச்சென்பார் ருன்ளிமென்பார் மோனமெனு மோட்சமென்பார்
பேச்சென்பார் ருன்னுண்டிய பேறறியார் பூரணமே

பர சௌபாக்கியத்தையும், இதைத் தவிர நாம் விரும்பும் எப் பொருளையும், விரும்புகின்ற அளவு திருமுருகன் தந்து ரக்ஷிக்கும் நாள்!

ஆதலால், என் மனமே! மிகவும் உயர்ந்த பொருளாகிய நம் கண்ணீரை அணுவளவும வீணாக்காது, திருமுருகனுக்கு காணிக்கையாகச் செலுத்த முயன்று வெற்றி பெறுவாயாக! துயரக் கண்ணீர் நோய் தரும்; பக்தியின் மேலீட்டால் ததும்பும் கண்ணீர்க்கு சில கண் வியாதிகளையும், "மூளையைப் பற்றிய சில பிணிகளைத் தீர்க்கும் ஆற்றலும் உண்டு; என்ன அதிசயம்!

'ஒழியாப்பிறவி எடுத்தெடுத் தேங்கி உழன்ற நெஞ்சே!
அழியாப் பதவிக் கவுடதம் கேட்டி! அறுதியனை
மழுமான் கரத்தனை மால்விடையானை மனத்தி லுன்னி
விழியாற் புனல்சிந்தி விம்மியழு நன்மை வேண்டுமென்றே'
(பட்டினத்தார்)

கீதையின் சாரம்

(444-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

K. S. சுந்தரமூர்த்தி

கண்ணன்:—அப்படிக் கேட்ட பார்த்திபனுக்குக் கண்ணன் போர்க்களத்தில், பிறருக்குத் தெரியாமல், இரகசியமாக, அர்ச்சுனா! 'தேகத்தையும் 'பிராணனையும், ஞானேந்திரியம், கன்மேந்திரியங்களையும் நீயென்று இத்தனை காலமும் கண்டு வந்தேன்; இதற்கு வேறாக வேறொன்றும் காணவில்லை யென்றும் கூறினை. இவற்றை விஷயமாக அறிந்த அறிவாயிருந்து கூறுகிறவனும், முன் சொல்லிய தேகாதிகளால் அறிய முடியாதவனே உண்மையில் நீயாக இருக்கிறாய்.

பரமென்பார் பானுவென்பார் பாழ்வெளியாய் நின்ற
வரமென்பா ருன்றன் வழியறியார் பூரணமே

பார்த்திபன்:—கண்ணா! நீ சொல்வதுபோல் இவ் உடம்புக்கு ஆன்மா சம்பந்தப் பட்டதல்ல வென்றால், அந்த ஆன்மா இந்த வுடம்பில் ஏன் வந்து தங்கியது?

கண்ணன்:—உன்னுடைய ஜெனன மரணாதிகளின் வாயிலாக துன்பங்களை உண்டாக்கும் நல்வினை தீவினையினால் அந்த ஆன்மா உடம்பில் தங்குகிறது.

பார்த்திபன்:—கண்ணா! நன்று சொன்னாய்! இவ் வுடம்பு வருவதற்கு காரணம் நீ செய்த கருமம் என்கிறாய். அந்த கருமம் இந்த வுடம்பு இருந்தால் தானேவரும். இந்த வுடம்பு எடுப்பதற்கு முன்பு கருமம் எப்படி வந்தது?

கண்ணன்:—விஜயா! வித்துக்குள் மரமும், மரத்துக்குள் வித்தும் ஒன்றுவதுபோல, கர்மத்திற்கு இவ்வுடலும், இவ்வுடலுக்கு கர்மமும் முதலிலேயே வரக்கூடும்.

பார்த்திபன்:—கண்ணா! இந்த வுடம்பும், ஆத்மாவும் ஒன்றுக்கொன்று பிரியாமல் இருக்கிறதே! அப்படியானால், கன்மங்கள் செய்வது இவ்வுடலா? (அல்லது) இந்த ஆத்மாவா?

கண்ணன்:—காண்டீபா! கர்மச் செயலானது இந்தக் கொடிய வுடலுக்கே யல்லாமல், ஆத்மாவாகிய தனக்கு இல்லை.

பார்த்திபன்:—கண்ணா! அப்படியானால், பற்பல விதமாக விரிந்த இந்த கர்மங்களை இந்த வுடம்பு செய்யுமானால், இதனால் வரும் பாவ புண்ணியங்களை அனுபவிப்பது இவ்வுடலா? ஆன்மாவா?

கண்ணன்:—இந்த தேகம் செய்யும் கர்மத்தினால் வரும் பாவ புண்ணியங்களை இந்த தேகமேதான் அனு

எத்தனை பேரோ மெடுத்தெடுத்துத் தானுரைத்தார்
அத்தனைபேர்க் கொன்றான தறிகிலேன் பூரணமே

பவிக்க வேண்டும். அது அந்த புண்ணிய பாவங்களுக்கு வேறாக இருந்து அறிகின்ற இந்த ஆன்மாவிற்கு இல்லை.

பார்த்திபன்:—தேகம் செய்த கர்மங்களை இவ்வுடம்பே அனுபவிக்கும். அதை ஆன்மா அனுபவிக்காது என்று கூறி யருளினீர். அப்படி யிருக்க, இந்த வுடம்பு பிணமாய் விழுந்த பிறகு இதோடு எஞ்சியிராத இந்த ஆன்மா, நரக சொர்க்கங்களைச் சந்தேகமின்றி அனுபவிக்குமென்று சொல்லுகிறார்களோ? அவர்கள் எதனால் அப்படிச் சொல்லுகின்றனர்?

கண்ணன்:—காண்டீபா! நீ சொல்வதுபோல் ஆன்மாவிற்கு நரக சொர்க்கங்களின் அனுபவமே கிடையாது. அப்படி ஆன்மாவிற்கு நரக சொர்க்கம் உண்டு எனக் கூறப்புகின், உடம்பு, இந்திரியங்கள் செய்த செய்கையை தன்னுடைய செய்கையாக சொல்வதைப் போலவாகும். மற்றும் இன்னொரு வகையில் பார்க்கில், உலக மக்கள் இந்த வுடம்பு தான் செய்த கருமங்களை அனுபவிக்கும். இது ஆன்மாவிற்கு கிடையாது எனத் தெரிந்தால், மனிதர்கள் பின்னால் தான் அனுபவிக்க வேண்டியவைகளைப் பற்றி நினைக்காமல் மேலும் மேலும் பாவத்தையே புரிந்து கொண்டு திரிவார்கள். இதனால் அநேக பிறவிகள் எடுக்க நேரிடுமே.

பார்த்திபன்:—கண்ணா! ஒருவரை மற்றொருவர் காணும்போது, நீர் ரொம்பவும் இளைத்து விட்டீர் என்றும், ஆமாம்; நான் முன்னைவிட இளைத்து விட்டேன்; முன்னைவிட பருத்தேதான் இருக்கிறேன் என்றும், நான் அவனை அடித்தேன் என்றும், அவன் என்னை அடித்தானென்றும், இன்னும் பல ஆன்மாவிற்கு வேறாகிய இந்த

மகத்துவமாய்க் காம மயக்கத்துக் குள்ளிருந்து
பகுத்தறிய மாட்டாமற் பயனழிந்தேன் பூரணமே

வுடம்பு செய்வதைத் தான் செய்தேன் என்று மனிதர் கூறுவது எதனால்?

கண்ணன்:—காண்டீபா! நீ சொல்வது அறியாமை யினால்தான் வருகிறது. மனிதர்களிடம் பூரண அறிவு இல்லாததினால்தான் இந்த மாதிரியாக உடம்பு செய்வதை யெல்லாம், ஆன்மா செய்வதாக கூறுவதற்கு அஞ்ஞானமே காரணம்.

பார்த்திபன்:—கண்ணா! முற்றறிவு இல்லாததினால் வரும் வார்த்தைதான் இதுவென்று கூறுகிறாய். அப்படி யானால் இந்த ஞான லக்ஷணம் தேகத்திற்கா? இந்த ஆன்மாவிற்கா?

கண்ணன்:—காண்டீபா! இந்த வுடலையும், ஆன்மா வையும் பிரித்துப் பார்த்தால், அழியுந்தன்மை யுடையது தேகம்; ஆன்மா அழியாதது. (பிரஹ்ம வடிவம் ஆன்மா). ஆகையால் இந்த ஞான லக்ஷணம் ஆன்மாவிற்குத்தான் உண்டு.

பார்த்திபன்:—கண்ணா! நீ சொல்வதுபோல் அழியக் கூடிய இந்த தேகத்திற்கு நல்வினை, தீவினை செய்யக் கூடிய செயல் வருகின்ற விதம் எவ்வாறு?

கண்ணன்:—விஜயா! ஒன்றாயும், மேலானதாயும் உள்ள சேதனத்தினிடத்தில் இந்த வுடம்பு இருக்கின்ற படியினால், இந்த உடம்புக்கு கர்மங்களைச் செய்யக்கூடிய தகுதி வரக்கூடும்.

பார்த்திபன்:—கண்ணா! இந்த ஆன்மாவினிடையே இந்த வுடம்பு இருந்திடினும், இந்த கர்மங்களைச் செய்யக் கூடிய தகுதி எவ்வாறு வந்தது?

பூசை யுடன்புவன போகமென்னும் போக்கியத்தால்
ஆசையுற்றே நானு மறிவழிந்தேன் பூரணமே

கண்ணன்:—அருச்சுனு! நெருப்பால் உருக்கமுடியாத காந்தத்திடம், ஊசி ஒன்றை நீட்டினுல், எப்படி அந்த காந்தத்திடம் அந்த ஊசிக்கு தொழில்படுஞ் செயல் உண்டாகிறதோ, அதுபோல, ஆன்மாவிடம் நெருங்கி யிருக்கும் இந்த வுடம்புக்கும், கன்மங்கள் செய்யக் கூடிய தகுதி வருகிறது, எப்படி ஊசியிடம் காந்தம் செல்வ தில்லையோ, ஊசிதான் காந்தத்திடம் விரைந்து செல் கிறதோ, அதுபோல், இந்த ஆன்மா வுடம்பிடம் நெருங்கி நிற்றல் இல்லை. இவ்வுடம்புதான் ஆன்மாவைப் பற்றி நிற்கிறது.

பார்த்திபன்:—கண்ணு! மேற்சொல்லிய கர்மச் செய லானது இவ்வுடலுகே யென்றுல், சுக துக்கங்கள் எவர் களுக்கு?

கண்ணன்:—காண்டீபா! அந்தவிதமான இன்ப துன் பங்கள் இவ்வுடலுக்கேதான்.

பார்த்திபன்:—கண்ணு! நீ சொல்லிய இன்ப துன் பங்கள் அறிவு வடிவாகிய இந்த ஆன்மாவில் சம்பந்தப் படாது என்றுல், கேவலம் அழியக்கூடிய இவ்வுடலிடத் தில் எவ்வாறு சம்பந்தப்பட்டு நிற்கும்?

கண்ணன்:—மண், தீ, நீர், காற்று, ஆகாயமாகிய பஞ்சபூதங்களின் காரியமான இந்த ஸ்தூல சரீரத்தோடு, 1. பிராணன், 2. அபானன், 3. உதானன், 4. வியானன், 5. சமானன் என்ற பிராணுதி வாயுக்கள், மெய், வாய், கண், நாசி, செவியென்ற ஞானேந்திரியங்கள், 5. வாக்கு, பாணி, பாதம், பாயு, உபத்த மென்ற கன்மேந்திரியங்கள், 5. மனம், புத்தி, சித்தம், அகங்கார மென்ற வுட்கருவிகள் நான்கு. ஆகிய இவைகள் இரண்டு வுடல்களாம். இந்த

சாந்தமென்றுங் கோபமென்றும் சாதியே தங்களென்றும்
பாந்தமென்றும் புத்தியென்றும் படைத்தனையே பூரணமே

இரண்டு வுடல்களினுள் அமைந்துள்ள இத் தத்துவங்களுள் நினைக்கக்கூடிய தன்மையுடைய இந்த மனத்திற்கே சுக துக்கங்கள்.

பார்த்திபன்;—கண்ணு! நீ கூறிய இந்த இரண்டு வகையான தேகங்களுக்கும் மூலம் எது?

கண்ணன்:—தனஞ்சயா! இந்த இரண்டு வுடல்களுக்கும் முதன்மையாக இருக்கிற அஞ்ஞானம் இவ்விரண்டிற்கும் மூலமாம். அந்தக் காரண சரீரம் ஒன்று இருத்தலால், சரீரங்கள் மூன்று.

பார்த்திபன்:—கண்ணு! வரக்கூடிய இன்ப துன்பங்களை மனம் அனுபவிக்குமென்று முன்பு கூறினீரே? அந்த மனமும், ஆராய்ந்து பார்க்குமிடத்து உடலைப் போன்று ஜடமல்லவா? அப்படி யிருக்க, அந்த மனம் எவ்வாறு இன்ப துன்பங்களை அனுபவிக்க இயலும்? இவ்விஷயத்தில் சந்தேகங் கொண்ட எனக்கு தேவரீர் கிருபை கூர்ந்து விளக்கி யருளுவீர்.

கண்ணன்;—காண்டீபா! நீ முன்பு அழியக் கூடிய இந்த மனத்திற்கு, சுக துக்கங்கள் எப்படி மருவுகின்றது என்று கேட்டாயல்லவா? இந்த அழியுந் தன்மை யுடைய மனத்தினிடத்து ஆன்மாவானது பேதமில்லாது போலப் பிரதிபிம்பித்துத் தோன்றுதலால், மனத்தினிடத்து இன்ப துன்பங்கள் மருவி நிற்கிறது.

பார்த்திபன்:—கண்ணு! நீ கூறியபடி இந்த இன்ப துன்பங்கள் மனத்திடம் மட்டும் நில்லாமல், அறிவு வடிவமாகிய ஆன்மாவிடம் வந்து மருவி நிற்பது எதனுல்?

கண்ணன்:—காண்டீபா! எப்படி நெருப்பின் மேலே வைத்த சட்டியில் சூடு ஏறி, பின்பு அந்த சட்டியினுள்

ஏதி லுடியா கிரங்கியிகத் தில்வந்து
பாத மதில்தாழப் பரிந்தருள்வாய் பூரணமே

இருக்கக்கூடிய தண்ணீரில் சூடு ஏறி, அதன்மேல் இருக்கிற சட்டியிலும் சூடு ஏறி நிற்கிறதோ, அதுபோல மனத்தினிடத்துள்ள இன்ப துன்பங்கள், அந்த மனத்தினிடத்துள்ள ஆன்மாவிடத்திலும் வந்து பொருந்துகிறது.

பார்த்திபன்:—கண்ணு! அறிவு வடிவாய ஆன்மாவும், அழியுந்தன்மை யுடைய மனமும் எவ்வாறு பேதமில்லாது இரண்டும் சேர்ந்து ஏகமாக விளங்குகிறது?

கண்ணன்:—பார்த்திபா! பிரகாச மில்லாத இரும்பானது, பிரகாசமுள்ள நெருப்பினிடத்து எவ்வாறு பொருந்தி நிற்கிறதோ, அதுபோல், பிரகாச மில்லாத இந்த மனமும், இயற்கையிலேயே பிரகாசமுள்ள ஆன்மாவினிடத்து பேதமில்லாது, ஆன்மாவினுடன் அறுதியாக பொருந்தியுள்ளது.

பிறப்பின் பயன்

(மூ. பொன்னையாப் பிள்ளை.)
ஸ்ரீ சச்சிதானந்த வேதாந்த பாடசாலை, புவனகிரி.

உடம்பினு லாய பயனுவ தெல்லாம்
உடம்பினில் உத்தமனைக் காண்.
அன்னத்தா லாய உடம்பின் பயனெல்லாம்
முன்னோனைக் காட்டி விடும். (ஔவை)

சாதகர் அப்பியசிக்கத் தொடங்குங்கால் சனசங்கை யில்லாத சுத்தமான தனி யிடத்தில் மணை ஒன்றிட்டு, அதன்மீது தர்ப்பாசனம் விரித்து, அதின்மீது மான்தோல் விரித்து, அதன்மீது துவைத்து உலர்ந்த வஸ்திரம் மடித்து, அதன்மேல் வடக்கு முகமாக சுகாசனத்தில் உட்கார்ந்து

மக்கள் சுற்றந் தாசை மறக்கேனே யென்குதே
திக்கரசா மாசையது தீரேனே யென்குதே

கொண்டு, ஆசிரியரையும் பரமாசிரியரையும் இஷ்ட தெய்வத்தையும் வணங்கி, சிறிது நேரம் மனதில் யாதொரு நினைவுமின்றி சாந்தமாக இருத்தல் வேண்டும்.

1. பிறகு தனக்கு முன்பக்கத்திலிருக்கும் தூலபஞ்ச விஷயங்களில் ஒன்றை கண்ணால் சுட்டி அறியும்போது ஓர் விஷயமாத்திரம் அறியப்படும். மற்ற விஷயங்கள் யாவும் அறியப்படாது இருக்கும். அறியப்பட்டது சகலம், அறியப்படாதது கேவலம்.

இந்திரியம் யாதொரு விஷயத்தையும் சுட்டி அறியாது பொதுப்பார்வையாக இருந்தால், தூல விஷயங்கள் தோன்றுவதான அறிவும் தோன்றாமையான அறியாமையும் போய், பார்வை பாராமை இரண்டுமில்லாத மத்தியகத அவஸ்தையாகச் சொல்லப்படும்.

இந்த அவத்தையில் சற்குருநாதன் அருளியபடி தனது உண்மை வடிவை அறிந்து, சாக்கிரப் பிரபஞ்ச விஷயம் சாமானியமாய்த் தோற்றும். தோற்றரவிற்கு சாக்ஷியாயிருத்தலே சாக்கிர துரிய அவத்தை யெனப்படும்.

2. மனமானது ஓர் விஷயத்தை நினைக்க, நினைத்த ஓர் விஷயமாத்திரம் நினைக்கப்பட்டு மற்ற விஷயங்களை நினைக்கப்படாததாகும். நினைக்கப்பட்டது சகலம். நினைக்கப்படாதது கேவலமாகும்.

மனம் விஷயத்தை சுட்டி நினையாமல், பொது நினைவாயிருந்தால் சூக்ஷும விஷயம் தோன்றுவதாய அறிவும் தோன்றாமையாய அறியாமையும் போய், நினைப்புமில்லாத மறப்புமில்லாத சுத்தாவஸ்தையாகும்.

இந்த அவஸ்தையில் நின்று, தனது உண்மை வடிவம் அறிந்து, சூக்ஷ்மவிஷய சாமாணியத் தோற்றரவிற்குச் சாக்ஷிமாத்திரமா யிருத்தல் சொப்பன துரியமாகும்.

காமக் குரோதங் கடக்கேனே யென்குதே
நாமே யரசென்று நாடோறு மெண்ணுதே

3. சுழுத்தியில் ஜீவன் அவ்வவஸ்தையில் தோற்றும் சூனியத்தைச் சுட்டி அறிய, சூனியமாத்திரம் அறியப்படும். சூனியத்தை அறிந்த தன்னை அறியான்.

சூனியத்தை சுட்டி அறிவது சகலம். தன்னை அறியா திருந்தது கேவலம். அங்கு தனக்கு எதிரான சூனியத்தை சுட்டி அறியாமல் பொதுப்பார்வையா யிருந்தால், சூனியந் தோன்றுவதான அறிவும் தான் தோன்றுததான அறியாமையும் போய், ஞானம் அஞ்ஞானம் இல்லாத சமாதி அவஸ்தையாகும்.

இந்த அவஸ்தையிலிருந்து தனது உண்மை வடிவங் கண்டு, தனக்கு முன்தோன்றும் சர்வ விஷயங்களுக்கும் தான் சாக்ஷிமாத்திரமாக ஆவதே சுழுத்தியில் துரியம் எனப் படும்.

4. ஈசுராம்ச சாக்ஷியாய தான், மாயாம்சமான சர்வ நாம ரூபவிஷயங்களுக்கும் சாக்ஷியாகத் தன்னை அறிந்தால் சாக்ஷித்துவ மாத்திரம் அறியப்பட்டு, சொருபாம்சமான சச்சிதானந்த அத்வைதத்துவம் அறியப் படாததாகும். சாக்ஷிமாத்திரமாக அறிந்தது சகலமும், சச்சிதானந்த அத்வைதத்துவம் அறியப்படாதது கேவலமாகும்.

ஆதலால் அங்ஙனம் சாக்ஷியத்துக்குச் சாக்ஷியாக அறியாமல் சும்மா இருந்தால், மஹாகாரண ப்ரபஞ்ச மான சாக்ஷித்துவம் தோன்றுவதாகிய அறிவும், நாமரூபங் கள் சச்சிதானந்தமயமாய் விளங்கும் அத்வைதத்துவம் தோன்றுததாகிய அறியாமையும் கெட்டு, விவகாரமும் பாரமார்த்திகமும் இன்றிய சகஜாவஸ்தையாகும்.

இச் சகஜாவஸ்தையில் நின்று சற்குருநாதன் அருளிச் செய்தபடி, சற்சீடனை தான் தனது எதார்த்த சொருப

அச்ச மாங்கார மடங்கேனே யென்குதே
கைச்சும் இன்னும் மரனம் கழலேனே யென்குதே

மாகயிருந்து, விளங்கி, ஒருமித்து, சதோதய பூரண, அத்வைதப் பிரமமாய் அமைவதே, துரியத்தில் துரியமாகும்.

5. இங்ஙனம் சச்சிதானந்தப் பிரம சொரூபமாகிய தன்னிடத்தில், ஜீவேஸ்வர ஜகங்களாகச் சொல்லிய ஆரோப நாமரூப மூல மாயாம்சம் தோன்றுமல், எப்போதும், எவ்விடங்களிலும் எந்த வஸ்துக்களும் அதிஷ்டமான சச்சிதானந்த சுபாவ சொரூபாம்சமாகவே விளங்கி, சாக்ஷி வாசனை கரைந்து அகண்டைக ரசாநந்த அத்வைத சொரூபமாய் அமைவதான அவதரமே துரியாதீதமாகும்.

முற்சொல்லிய அவஸ்தைகளைப் பற்றி இதையும் ஓர் அவஸ்தை என்று உபசாரமாய்ச் சொல்லியதே அன்றி வாஸ்தவம் அன்று. ஆதலால், இஃது சகஜாநுபவமாகிய சுபாவ சொரூபமேயாம்.

இதுவே வேதாந்த பிரதிபாதமாகிய சித்தாந்தப் பொருளாம். இதை சாதன சம்பத்துடைய அதிகாரிகளாயுள்ள யாவரும் கிரமமாக அப்பியசித்து, அநுபவமான அநுபூதி யடைவதுவே மானுட ஜென்மத்தின் பயனாகச் சத்துக்கள் சொல்வர்.

பிறந்தவர் பெறும்பயன் பேரின்ப வீடே

அதிசயம் அநேகமுற்ற பழனி

திருப்புகழ் சதுரர். சே. த. இராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.,

(470-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

பழநி உச்சிக் கோயில் :—

குராவடி வேலரைத் தரிசித்து மலையேறினால் உச்சியில் ஒளிர்வது தான் தண்டாயுத பாணியின் தனிப் பெருங்

நீர்க்குமிழி யாமுடலை நித்தியமா யெண்ணுதே
ஆர்க்கு முபராசை யழியேனே யென்குதே

தனியாகும். தன்னருகு சார்ந்தாரை யெல்லாம் தவலரும் பிறவிக் கடலில் தாழாதே எடுத்து மேல் நிலைக்கு உயர்த் தும் மேன்மை காட்டுவான் போலத் தன் திருக்கோயிலை மேல் திசை (மேற்கு) நோக்கி அமைத்துக் கொண்டுள்ளான்.

மேற்குத் திசை நோக்கிய மேன்மை :—

மேற்குத் திசை சூரியன் மறையும் திசை, ஒளிகுன்றும் திசை. மாலை வேளையான பொழுது சாயுங்காலத்திற் குரிய திசை. அது தத்துவக் குறிப்பில் நம் வாழ் நாள் (பொழுது) சாயும் (வீழ் நிலை) காலத்தை உணர்த்தும். பகலெல்லாம் ஓடியாடி உழைத்த உயிர்கள் தளர்ந்துவரும் வேளை மாலை வேளை. இந்த அந்திப் போதைக் கேவலா வஸ்தை என்று கூறுவர். அக்காலத்தில் உயிர்கட்கு அறிவு உதவுவன் ஆண்டவன். சிவனார்கூட அந்திப் பொழுதில் தான் அழகுற நடன தரிசனத்தைத் திருநந்தி தேவர்க்குக் காட்டுவர். அத்தகைய அந்தி வேளையில் சிறந்த தொன்றைப் பிரதோஷ காலம் என்ப.

" அந்திப்போ தழகுறவே நடித்தருளும்
வழித் துணைவர் " (விரிஞ்சிப் புராணம்)

ஆதலால் அந்திப் போதில் அருளுதவுதற் கென்றே அப்போதிற்குரிய திசை நோக்கிப் புனிதவேள் கோயில் கொண்டுள்ளனன் என்க.

மேல் திசை நோக்கி நின்றதால் தான் மேல் திசைப் பகுதியான மலையாளம் முதலியவை, மறைவள முதலிய குன்றுதிருக்கின்றன என்பதும் கண் கூடு.

கண்ணுக்குக் கண்ணெதிரே கட்டையில் வேகக்கண்டும்
என்னுந் திறமா யிருப்போமென் றெண்ணுதே

திருக்கோயில் :—

அண்ணலாரின் அருமைச் சன்னிதியடைவோர் பிரணவத் தியானத்துடன் செல்க என்பதனை நினைவூட்டுவதற்குத் திருக்கோயிலை நோக்கிய வண்ணம், "கொக்கறுகோ" என்று 'ஓ'கார ஒலியால் முருகனைக் கூவும் **சேவலும்**, ஓங்காரத்தை வரி வடிவத்தில் காட்டும் **மயிலும்**, ஞான பூரண சத்தியான **வேலும்** காணலாம். இதனைக் கண்டதும் "ஆடும் பரி, வேல், அணி சேவல் எனப் பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என்ற அநுபூதி தானாகவே பிறந்துவிடும்.

நாத நிலை நின்று ஞானநிலை யடைவார் போல, மணி கட்டி மண்டபத்துள் புகுந்து கட்டைக் கோபுர வாசல் வழியே இராஜகோபுரத்தை அடையலாம்.

கோபுரச் சிறப்பு :—

தூரத்திலேயே இறைவன் இருப்பைப் பற்றிய அருள் நினைவு அலைகளை எழுப்புவது கோபுரமாகும். அதனைத் தூல லிங்கம் என்பர். மக்களுக்குள்ள (1) ஜாக்கிரதை (விழிப்பு நிலை), (2) சுவப்னம் (கனு நிலை), (3) சுழுத்தி (அவசத் தூக்க நிலை), (4) துரியம் (அறிதுயில் நிலை), (5) துரியாதீதம் (அறிதுயிலோடு ஒடுங்கி அழுந்திய நிலை) என்ற ஐந்து நிலைகளைக் காட்டும் குறிப்புடைய ஐந்து நிலைகள் கொண்டது இராஜகோபுரம். பிரணவாகாரமான மூலாதாரத்திற்கு மேலான ஐந்து ஆதாரங்களை ஸ்ரீ பஞ்சாட்சரத் தியானத்தால் கடக்க வேண்டும குறிப்பாலும் ஐந்து நிலை கொண்டுள்ளது கோபுரமென்க. சிறப்பாகப்

அநித்தியத்தை நித்தியமென் றுதரவா யெண்ணுதே
தனித்திருக்கே னென்குதே தனைமறக்கே னென்குதே

பழநிக் கோபுரம் அமைகின்ற குறிப்பு தெள்ளியது போலப் பழநித் திருப்புகழில் ஞான நிலையை உணர்த்தும் பாடலில்,

"ஞானங் கொள் பொறிகள் கூடி
வானிந்து கதிரிலாத நாடண்டி
ந, ம, சி, வா, ய, — வரையேறி"

என்று கூறியதும் சிந்தனைக்குரியதாம்.

பார வேல் மண்டபம் :—

கோபுரத்துள் நுழைந்தால் பெருமை மிக்க வேல்கள் நிறைந்த பார (பெருமை) வேல் மண்டபமும் வாத்திய மண்டபமும் காணலாகும். வினையோடவிடும் வேலின் துணையால் தான் வேலனைக் காணலாகும்.

இங்கு ஆலடியில் அறமுரைத்த தக்ஷிணாமூர்த்தியும், மலைக் கொழுந்து சிவனும், மலை நாச்சியம்மையும், சிவத்தின் யோக நிலை போக நிலை காட்டி நிற்றல் அறியத் தக்கது. இடையில் விளங்கும் தண்டபாணியே ஞான இன்ப நிலையை உணர்த்துவன்.

பள்ளியறைச் சிறப்பு :—

அதனை யடுத்துக் காட்சி வழங்குவது, ஆண்டவன் திருப்பள்ளியறையில் போகியாயிருந்து உயிர்க்குப்போகத்தைப் புணர்க்கும் திருவருட் குறிப்பை உணர்த்தவே பள்ளியறை விழா தினமும் செய்யப் படுகிறது. சித்த மூர்த்தியாய் விளங்கும் ஞான தண்டபாணியை ஆண்டி (துறவி) என்றும், கிழவர் என்றும் தவறாக எண்ணும்

அன்னை வயிற்றி லழிந்தநாள் போதாதோ
மன்னவனாய் வாழ்ந்து மரித்தநாள் போதாதோ

கருத்தைத் திருத்தவே இங்கு இச்சேவை நடைபெறுவது போலும்.

"அருளுருவும் தானுமாய் ஆண்டிலனே லந்தப்
பெருவடிவை யார் அறிவார் பேசு"

என்ற பெருவாக்காலும், அருளுருவான சக்தியோடிணைந்த சக்திமானாகிய கோலமே அநுக்கிரக கோலமென்பது சிந்திக்கத் தக்கதாகும். இப்பள்ளியறைச் சேவை நமது அருணகிரிப் பெருந்தகை தரிசித்த காலத்தில் சிறப்புற அமைந்திருந்தது; அதில் வள்ளியம்மையுடன் பள்ளியறை சேவை நடந்தது என்று பொருள் :-

வேடம் பெண் அமளி சேவை காணெங்கள் பழநி மேவும் - பெருமாளே" என்று கூறியிருக்கும் பழநித் திருப்புகழ் ஆராய்ச்சிக்குரியது.

அப்பள்ளியறையை அடுத்துச் சண்முக நாதர் சந்நிதியும், சின்ன குமரர் சன்னதியும் காணலாம். பின்னே நமக்கு அருள் சுரக்கும் அண்ணலாரே நமது தண்டாயுத பாணியாகும்.

ஞான தண்டபாணி :—

ஞானம என்பது தெளிந்த அறிவு. அத்தகைய ஞானம் செம்மை பெற்றிருக்கும். ஆதலால் சிவஞானம் எனப்படும். அச்சிவஞானச் செம்மல செந்நிறமாய் விளங்கும் சிறப்பால், கோடி சூரிய ஒளிமயமாய்க காட்சி வழங்குகிறான். அதனை "பருதியின் பிரபை கோடியதாமெனும் வடிவு கொண்டருள் காட்சியின் மீறிய பழநியங்கிரி மீதினில் மேவிய

தாயாகித் தாரமாய்த் தாழ்ந்தநாள் போதாதோ
சேயாய்ப் புருடனுமாய்ச் சென்றநாள் போதாதோ

பெருமானே '' - என்று வாயாரப் பாடி மகிழ்கிறார் நமது அருணகிரி முனிவரர்.

திருவுருவச் சிறப்பு :....

பவப்பிணி யறுக்கும் பண்பாளனுன முருகன் உடலுறு பிணியை ஒழிக்க இயலாதோ! அதற்கென்றே உடலுக்கும் உயிருக்கும் உரமளிக்கும் ஞானமிர்தமான பஞ்சாமிர்த மென்னும் மருந்தின் வளனுதவ, நவபாஷாணக் கட்டாலாகிய திருவுருவுடன் எழுந்தருளி யுள்ளான். இத் திருமேனி நிலையும், நோக்கி நின்ற திசையின் நிலையும் ஆராய்ந்தால், உறுபிணி யொழித்து உயர் கதி உதவும் சீலமே தெளிவாக்கியவாறும்.

பழநிப் பரமனை முண்டிதப்படும் (சிகை நீங்கிய மொட்டையான) சென்னியன் என்று கூறுவது எங்கும் கேட்டிருக்கலாம். இது ஞான நாயகனை நன்கு கூர்ந்து கவனிக்காதார் கூற்றெனக் கழிக்கத் தக்கது. ஏனெனின் நம்பெருமான் திருவுருவைப் பழநித் தலபுராண ஆசிரியர்.

> " பிடர் கிடந்த புன் குஞ்சியும், பெருகிய கருணைக்
> கடலலம்பு கண்களும், கவின் ஒழுகிய முகமும்
> வடிவும் நூலும் மார்பும் கை ஒண்கோலும் வயங்க
> நெடிய கோவண உடையுடன் "

நின்ற திருக்கோலமென்று கூறுவது காண்க. இளம் பூரணனுக்குத் தலையின் சிறு குடுமி உண்டு. அவரது திருக் கரத்துள்ள தண்டு என்பது, நரை மூத்த கிழவர்கள் நடப்பதற்கு உறு துணையான தடியல்ல. இளங்காளையர் அழகுறத் தாங்கிச் செல்லும் கோல் எனக் கொள்க. திருமணக்கோலப்

நோயுண்ண வேமெலிந்து நொந்தநாள் போதாதோ
பேயுண்ணப் பேயாய்ப் பிறந்தநாள் போதாதோ

பெருமாளான சுந்தரர் கைத்திருக்கோலும் உன்னுக. என்றும் அகலாத இளமை யுடையான் தடியூன்றி நடக்கிறான் என்பது பொருந்தாது. இப்பெருமான் திருவுருவச் சிறப்பை பின்னும் வருமிதழிற் கூறி மகிழ்வாம்.

(தொடரும்)

முருகனடியார்—11

வெற்றிக் கொடிமரம்

ரசபதி

வேதியர் வேத பாராயணம் நடை பெறுகிறது; புராணப் பிரசங்கம் ஒரு புறம்; ஆகமப் பயிற்சி மறுபுறம்; பரமனைப் பாடிப் பரவுவார் ஒரு பக்கம். இங்ஙனம் கந்தனை வந்திக்கும் செயல்கள், கோயிலில் கம்பீரமாக நடைபெறுகின்றன.

டடட...ட...டமால் என்ற பேரொலி, எவரையும் திடுக்கிடச் செய்தது; என்ன அது என்று ஒலி வந்த திசைநோக்கி அனைவரும் ஓடி வந்தனர்.

அடடா! துவஜஸ்தம்ப மல்லவா முறிந்து விழுந்திருக்கிறது. பல காலமாக வெய்யிலில் காய்ந்து, மழையில் நனைந்து, உளுத்துப் போன நிலையில் விழுவது இயற்கை என்று எவர் மனமும் எண்ண வில்லை. கொடி மர முறிவு, அமங்கல அறிகுறி யென்றே அனைவரும் எண்ணினர்.

ஆறுமுக அப்பா! அருள் முகத்து அரசே! வீறு முக வேலோனே! நாங்கள் யாது பிழை செய்தோம் தெரியவில்லையே! தெய்வமே என்று தேம்பித் தேம்பி ஆலயத்தி லிருப்பவர் அனைவரும் அழுதனர். இச் செய்தி, பரமன் செந்தில் பதிமுழுதும் பரவியது. மக்கள் இதனை எண்ணி மனம் புண்ணுற்றனர். என்ன விபத்து நேர இருக்கிறதோ என்று அவர்கள் கதறும் ஒலி, கடலொலியையும் அடக்கியது.

நில்லாமைக் கேயழுது நின்றநாள் போதாதோ
எல்லாரு மென்பார மெடுத்தநாள் போதாதோ

அவ்வழியே வந்தார் ஒரு பௌத்தர். நடந்ததை யறிந்தார். இது தான் சமயமென்று அறிந்தார். பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற போலிக் கொள்கை போய்த் தொலைக! நமோ புத்தாய! சங்கம் சரணம் கச்சாமி! தர்மாங் சரணம் கச்சாமி என்று வீறிட்டுத் தன் சமய விளம்பரம் செய்யலானார். இச்செய்தி, அனல் பட்ட புண்ணில், அம்பு பாய்ச்சியது போல் இருந்தது அன்பர் கட்கு

அதே சமயம், மா...மா...அம்மா...என்று கத்திக் கொண்டே ஒரு எருமை கடலை நோக்கிச் சென்றது. மோதும் அலைகளை முட்டி, சீறி நீருள் செல்கிறது; அதனைத் தடுக்க எவராலும் முடியவில்லை. வெறிகொண்ட எருமை யென்று வேதனை யெய்தினர் அனைவரும். கொடி மர வீழ்ச்சி, அதைத் தொடர்ந்து கடலில் எருமையின் வீழ்ச்சி, இந்த இரண்டிற்கும் தொடர்பு ஏதோ இருக்கிறது என்று எண்ணி யிடிகின்றது மனம்.

கண்ணிற்கு எட்டிய தூரம் சென்று கடலில் மறைந்த எருமை, அரை நாழிகை யளவில் மீண்டும் கண்ணிற்குப் புலப்படுகிறது. மறைந்த எருமை, அதோ அதோ திரும்புகின்றது! எதையோ தள்ளிக் கொண்டே வருகிறதே என்று, கண்ணிமை கொட்டாது நோக்கிக் கூவினர் கரையோரத்தவர்.

என்ன வியப்பு! முதிர்ந்த ஒரு சந்தன மரத்தை யல்லவா மூன் தள்ளி நீந்தி வருகிறது! அன்பர்கள் ஆரவாரித்தனர்; கரை எய்தியது எருமை.

உவகை மிகுந்த அன்பர்கள் ஓடி வந்தனர். எவரையும் பொருட் படுத்தாமல் எருமை கோயிலுள் நுழைந்தது; சண்முகன் சந்நிதி சார்ந்தது. அருமைச் சந்தன மரத்தைக் கோயிலுள் சேர்த்த அடியவர், எருமை யிருக்குமிடம் எய்தினர்.

திடீரென்று தலைமை யர்ச்சகர் மேல் தற்பரன் ஆவேசித்தான். கொடி மரத்திற்கு மரம் கொணர்ந்த நீ, என்றும் இங்கு இரு என்று அதன் தலைமேல் கை காட்டும் அளவில், அது கல்லெருமையாய் மாறிக் காட்சி யளித்தது. ஆவேசம் மலை யேற, அரஹர

பிறப்பைத் தவிர்த்தையிலை பின்னுகக் கொண்டையிலை
இறப்பைத் தவிர்த்தையிலை யென்னென்று கேட்டையிலை

கோஷம் அளவின்றி எழுந்தது. பரவசம் எய்திய அன்பர்கள், கந்தப் பெருமான் ஆவேசித்து இட்ட கட்டளைப்படி, சந்தன மரத்தை துவஜஸ்தம்பமாக்கி மகிழ்ந்தனர்

அருளின் வெற்றிக்கு அறிகுறியாய, விண்ணேக்கக் கொடித் தம்பம் விளங்கியது. தொடர்ந்து நிகழ்ந்த ஒவ்வொன்றும் பௌத்தர் உள்ளத்தை உறுத்திற்று; உன்ன உன்ன உருகியது அவர் உள்ளம்; கசிந்தன கண்கள்; கந்தப் பரமன் கண் கண்ட தெய்வம் என்று வாயில் வந்தது வார்த்தை. தன் சமய கோலத்தைக் களைந்தெறிந்து, கிரிசுதந்தரரிடம் திரு நீறு பெற்றுத் தரித்து, செந்திலாண்டவனையே பல காலம் வழிபட்டார். **பக்த முருக பௌத்தர்** என்று அன்பர்கள் அவரையழைத்தனர். வாக்கு, மனம், காயம மூன்றும் ஒருமித்து ஆராதித்த பயனாக, ஆறுமுகன் தாள் நிழலை அடைந்து, அமைதி யுற்றது அவர் ஆன்மா.

2. கரையேறிய கரும்பகடு

இதோ வருகிறது மற்றொரு எருமை; கோயிலை வலம் வருகிறது; வந்தபடியே யிருக்கிறது. அர்த்த ஜாம வழிபாட்டின் பிறகு, பரமன் ஆலய வாயிலில் படுத்தது; மறு நாள் வைகறையில் கோயில் திறப்பாளர் வந்தது கண்டு எழுந்தது; பரமன் ஆலயத்தைப் பழையபடி வலம் வருகின்றது. மூன்று நாட்களாக இதன் செயலை முருகன் அடியவர் அறிந்தனர். அயலூரி லிருந்து அதைத் தேடி வந்த உரியவனும், இதை உணர்ந்தான். முன்னைய ஞானத்தின் முதிர்வு இது என்று முருக பக்தர்கள் பேசுகின்றனர். அதைக்கேட்ட உரியவன், அதை ஓட்டிச் செல்ல அஞ்சினன்; வணக்கம் செய்தான்; வந்த வழியே சென்றான். செவ்வேள் பெருமானைச் சேவிக்க வரும் ஒவ்வொருவரும், பலபட எருமையின் செயலைப் பாராட்டினார்;ஆலயத் திருப்பணியாளர், அதற்குக் காலத்தில் தீனியை யளித்தனர்.

அப்பதியில் ஒரு அப்பாவி யிருந்தான்; செல்வச் செருக்குடன், கல்வியால் மண்டைக் கர்வம் கொண்டவன்; குருட்டுத் தனமான உலகாயதம் அவன் கொள்கை.

பாச வெரித்தையிலே பரதவிப்பைத் தீர்த்தையிலை
பூசிய நீற்றைப் புனையென் றளித்தையிலை

அறுமுகனும்; அடி நிழலில் முத்தியாம்; 'கண்கண்ட சுகம் உலகம்; இது, கைகண்ட பலன்; இத்தெளிவு இவர்கட்கு என்று வருமோ என்று வாயாடுவது, அவனுக்கு வாய்ப்பா யிருந்தது. ஒரு நாள் கோயில் பக்கமாகப் போய்க்கொண்டே யிருக்கிறன். கோயிலை வலம் வரும் எருமையைக் கும்பிடுகிறர் ஒரு அன்பர். அதைக் கண்டான்; ஆத்திரம் அதிகரித்தது.

ஏய் தம்பி! என்ன இது! எருமையையா வணங்குகிறீர்!

ஐயா! இது முருக பக்தி முதிர்ந்தது. இதனை வணங்கினல் ஆன்ம லாபம் வாய்க்கும்!

சிறு மதியாளன் சிரித்தான். மனித பக்தியை மாடு கவர்ந்தது; மாட்டுப் பக்தியை இப்பொழுது மனிதன் கவரப் பார்க்கிறன்; அட பகுத்தறிவில்லாத பாமரமே! சோறு கண்ட இடம் சுகம் என்ற இனத்தைச் சேர்ந்தது இந்த எருமை. இதை உணராத ஏழை மதியால், எருமைக்குப் பெருமை. பேஷ்! நன்ரு யிருக்கிறது செய்தி!

ஐயா! இந்த நாஸ்திக வாதம் எம்மிடத்தில் வேண்டாம்; பன்னிரு கண் பரமனுக்கு, நாம் பதிலளிக்க ஒரு காலம் வரும். விதியின் அளவிற்கு உரியது மதி. மதியை மதிப்பது மடமை; தூய உணர்வின் ஒழுக்கத்திற்குத் தான் உலகம் மதிப்பளிக்கும். முன்னைய புண்ணிய வாசனையால், முருகனை வலம் வருகிறது இது; பழைய தீய பாவத்தால், மங்கிய மனிதன், கண்ணவித்து கடவுள் நிந்தனை செய்கின்றன்; அஃறிணைக்கு இருக்கும் தெளிவு கூட உயர்திணைக்கு இல்லை; இதுதானே பாவக் கலியின் பண்பு என்று ஆத்திரத்தால் பொரிந்து கொட்டினர் அந்த அன்பர். ஒரு கூட்டமே இந்த விவாதத்தில் கூடிவிட்டது. நீங்கள் இவர்களைப் போன்றவருடன் பேசவே கூடாது;'தீயாரைக் காண்பதுவும் தீது'; வாருங்கள் போகலாம என்று, அன்பரை மக்கள் அழைத்துச் சென்றனர்.

கோபத்தால் கொதித்த உலகாயதன், அப்படியா செய்தி என்று கொக்கரித்துக் கர்ஜித்தான். ஊரார்க்கு அறிவு கற்பிக்க

உன்னி லுமைந் நயிலை யொன்றுக்கிக் கொண்டையிலை
நின்னடியார் கூட்டத்தி லியமைத்து வைத்தையிலை

வேண்டும்; இதற்கு யாது வழி என்று தன் சிற்றினத்தொடு சிந்தித்தான். கொடியோர் ஆய்ந்து ஒரு முடிவிற்கு வந்தனர்.

மறு நாள் இரவு ஒரு மணி. கோயில் வாயிலில் தலையை நீட்டிப் படுத்திருக்கிறது பக்த எருமை. சிவகுமரன்பால் சிந்தனை பதிந்த அதனை முற்றுகை யிட்டனர். கருணை சிறிதும் இல்லாமல் அதன் கண்களை யிறுகக் கட்டினர். எழுந்தது, அவ்வளவில் பதைத்து எருமை. முரணுத அதை நடத்திச் சென்றனர். படகில் ஏற்றினர். சிந்தனை மதர்த்துப் படகைச் செலுத்தினர். நடுக் கடலில் தள்ளினர்; திரும்பினர். சத்தடி யின்றி தம் தம் இல்லம் சார்ந்தனர். வாயிலாப் பிராணி, நீருள் மூழ்கி மறைந்தது.

வைகறையில் கோயில் திறப்பாளர் வந்தனர். வழக்கப்படி எருமையை வாயிலில் கண்டிலர்; ஏக்கம் மிக்கனர்; எங்கும் தேடினர்; எருமையின் மறைவுச் செய்தி, எங்கும் பரவியது. எவன் செய்த அட்டூழியமோ என்று கனிவு மிக்க அன்பர்கள் கண்ணீர் சிந்தினர்; எங்கும் இதே பேச்சு.

ஒன்றும் அறியாதவன் போல், உலகாயதன் வீதி வழி வந்தான்; பேசுவார் பேச்சுக்களைக் கேட்டான்.

அடடா! அப்படியா! எங்கு போயிருக்கும் எருமை? அது போயிருக்கும் இடம், பன்னிரு கண் உங்கள் பரமனுக்கும் தெரியாதோ? கடவுள் அன்பு மிக்க எருமை, கடலுள் விழுந்திருந்தாலும் கரைசேர்த்துக் கொண்டு வருமே!

பேச்சும் மகிழ்ச்சியும் பெருகுதல் கண்டு, அவன் தான் ஏதேனும் தவறு செய்திருக்கக் கூடும் என்று அஞ்சியது அன்பர் மனம். எனினும், அதை எப்படி நிருபணம் செய்ய முடியும்?

வாய்ப்பறை யன்றி செயல்முகம் இல்லாப் பாழும் மனிதர்க்கு வாழும் வழி கற்பித்தது அருள் முகமான எருமை. அதற்குமா இடையூறு? அடியார்க்கு நீ அருள்கின்ற பேறு இதுவோ அமலா என்று அலறி அழுதனர் செந்தில் அன்பர்கள். குமுறிக் கதறும் அடியார்கள் துயர்கண்டு, பொறுக்குமோ அந்தக் கோழிக்கொடியோன்?

ஓங்குபரந்து ளொளித்த வடியார்க் கடியான்
ஈங்கோ ரடியா னெமக்கோன் றுரைத்தையிலே

ஓ…ஓ…ஓ…என்று பேரிரைச்சலிட்டுப் பொங்குகிறது கடல். ஆகாயத்தை நோக்கி எழும் அலைகள், அச்சம் பிறப்பித்தது அனைவர்க்கும்.

அதோ அதோ என்று வீறிடுகின்றனர் சிலர். என்ன அது என்று எவரும் கடலை நோக்கினர்.

என்ன வியப்பு! கண் கட்டு வாய்க்கட்டுடன், கடலில் எருமை காட்சியாகிறது. அலைகளில் முக்கி முனகி வருகிறது. வா முருகா! வா வா என்று மகிழ்ந்து ஆரவாரிக்கிறார்கள் அன்பர்கள். சிரமம் அதிகமின்றிக் கரையேறி, அறுமுகன் ஆலய வாயிலை அடைந்தது. அன்பர்கள் தொடர்ந்து ஓடிவந்தனர். கட்டுக்களை அவிழ்த்தனர். தெய்வக் கோயில் திருப்பணியாளர் தீனி வைத்தனர். தின்று, நீர் பருகி, பழையபடி வலம் வரலாயது. அவ்வளவில், கடலொலி அடங்கியது; இந்நிலை கண்ட அன்பர்கள், மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர்; அன்பின் அலைகளில் மிதந்து அறுமுகன் சந்நிதி அடைந்தனர்.

வலம் வந்த எருமையும், முருகன் திருமுன் வந்து நின்றது. பரமன் திருமுகத்தைப் பார்த்து, ம்மா அ அ என்று வீறிட்டது. அதன் பொருள் யாதோ அறிபவர் யார்? பரமன் திருமுன் படுத்தது; மீட்டும் எழவில்லை. அன்பொளி மயமான அதன் ஆன்மா, அருள் ஒளி மயமலன் அடி நிழலை அடைந்தது; கண்ட அன்பர்கள், கண்ணீர் சிந்தினர்.

நாஸ்திக நண்பர், இவைகளைக் கண்கூடாகக் கண்டு நாணினர்; குற்றம் குறுகுறுத்தது; குமைந்தது மனம்.

குமரன் அருளாடல் அறியாத குணக்கேடன் ஆயினேன்; எருமைக்கும் பெருமை தந்த இறைவன், பாவியேன் பிழையைப் பொறுப்பானோ? நினைக்கிறபோதே நெஞ்சம் வேகிறதே! செந்தில் செல்வமே! பரங்கிரிப் பரமா! பழநி வாழ்வே! ஏரகத்து இறைவா! குன்றுதோறாடும் குமரா! பழமுதிர் சோலையில் மாமதுறுவாய் மகிழ்பவனே! என்னை மன்னிப்பாயா! அமரரை அலமரச் செய்த சூரனை ஊர்தி யாக்கினாய்; பதுமனைச் சேவ

நாமந் தரித்ததையிலை நானெழுதிய நின்றையிலை
சேம வருளிலெனைச் சிந்தித் தழைத்ததையிலை

லாக்கிய உன் கருணை, எளிய என்னை ஏற்காதோ என்று கண்ணருவி பொழியக் கதறினர். தன் செல்வத்தை யெல்லாம் செவ்வேள் கோயிலில் சேர்த்தார். நெற்றியில் நீறு; கழுத்தில் உருத்திராக்கம்; கையில் ஜபமாலை.

எருமை என் குரு; அது காட்டிய வழியைப் பின்பற்றுவேன் என்று ஆலயத்தை வலம் வந்தார்; ஆலயப் பணியாளர் அளித்த ஒருவேளை உணவை உண்டார்; அடியர்பணி யாற்றினர்; இவ்வனம் பலகாலம் ஈடுபட்டு அமைதி யடைந்தது அந்த மனம்; இவர் பெயரும் காலப் போக்கில் கரந்தது; உலகாயத மொழிந்த அன்பர் என்ற பெயரால், இவரை இன்றும் உணர்கிறது உலகம்.

3. அபிஷேக இளநீர்.

ஆலயத்தில் பெருமானுக்கு அபிஷேகம் நடைபெறுகிறது. உதாத்தம், அநுதாத்தம், சொரிதம் எனும் எடுத்தலோசை, படுத்தலோசை, நடுத்தரவொலி தவருமல் வேதியர் அவ்வமயம் ஓதும் மந்திர நாதத்தில், வேத அதிதேவதைகளின் தெய்வ நிருத்தம் வெளியாகின்றது. அமுதினும் இனிக்கும் அருந்தமிழால் பாடும் பண்ணிசை, கல் மனத்தையும் கரைத்து, மெய்ம்மயிர் பொடிப்ப, கந்தப் பரமன் அருள் திருவுருவை கண்முன் கொணர்ந்து நிறுத்துவதுபோல் இருக்கிறது. ஓம் ஓம் என்னும் கோயிலின் மணியொலி, செவியுள் புகுந்து இதயத்தில் பாய்ந்து, அமைதி உபதேசத்தை அருளுகின்றது. பக்திப் பரவசம் எப்படி யிருக்கும் என்பதை அங்கே பார்த்துவிடுகிறோம். பால், தயிர், தேன் முதலியவற்றை ஒவ்வொன்றாக எடுத்து அபிஷேகிக்கிறார் அர்ச்சகர். அபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்த அன்பர், விறுவிறுப்புடன் சுற்று முற்றும் பார்க்கிறார்; அவர் கண்கள் எதையோ தேடுகின்றன என்று தெரிகிறது.

ஆம். உண்மைதான்; அபிஷேக திரவியங்களுள் ஒன்று இளநீர். எல்லாம் சேகரித்தவர் அதை மறந்திருக்கிறார். ஆஹா! என்ன முட்டாள்தனம்! ஆன்ம வர்க்கங்களை இடையறாது எண்ணி

கட்டவுல கக்காட்சி கட்டொழியப் பார்த்ததையிலை
நிட்டையிலே நில்லென்று நீநிறுத்திக் கொண்டதையிலை

யெண்ணி வெம்மையுறும் திருமேனிக்கு, இளநீர் ஆட்டுதல் அவசியம் அல்லவா! திருமந்திர வெம்மைத் திருமேனிக்கு, அபிஷேகிக்க இளநீர் இல்லையெனில், பூசனை குறைபாடுடைய தாகுமே! 'பூசனை வழுவுமாயின் புரைஉடல் தன்னைப் போற்றி, சீசியானிருக்க லாற்றேன் இறப்பதே திண்ணம்' என்று அன்றொரு வேடுவன், பூசா திரவியங்களுள் ஒன்று குறைந்த தென்று மனமுடைந்து கதற, அவன் மனையாள் வீட்டைக் கொளுத்தி, அதனில் வீழ்ந்து இறந்தாள் என்று புராணம் புகல்கிறதே! இளநீர் திடீரென்று எங்கு கிடைக்கும்? பூஜா காலம் தவறி அகப்பட்டால்தான் யாது பயன்? ஐயோ ஐயோ என்று சந்நிதியி விருந்து வெளியில் ஓடிவருகிறார். பேயறைந்தது போல் உளது அவர் திருமுகம். கண்டவரை யெல்லாம் கையெடுத்துக் கும்பிடுகிறார்.

ஐயா! ஐயா!! இங்கு இளநீர் எங்கு கிடைக்கும்?

எதற்குக் கேட்கிறீர்?

ஆண்டவன் அபிஷேகத்திற்கு ஐயா! உடல் நடுக்க, சொல் குழறுகிறது.

அதற்காகவா ஐயா இப்படி அங்கலாய்க்கிறீர் என்றனர் சிலர்; இவ்வளவு அஜாக்ரதை உமக்கு ஆகாது என்று கடிந்தார்கள் சிலர். இளநீர்ப் பாவனை செய்து கொள்ளலாம்; அர்ச்சகரிடம் சொல்லும் என்று முற்றக் கற்றவர் ஒருவர் முடிவு கூறினார். இங்ஙனம் கூறினரைவிட, கல்லாதாரே நனி நல்லர் என்று வருந்துகிறது அன்பர் மனம்.

கோபுர வாயிலுக்கு வெளியே விரைந்து போய்க்கொண்டிருக்கும் அமணர் ஒருவர், அன்பர் அங்கலாய்ப்பைக் கண்டார். என்ன ஐயா! என்ன செய்தி என்றார்.

அவரை அறிந்திருக்கும் அன்பர், ஆ! தாங்களா! தவறு செய்துவிட்டேன்; அபிஷேகத்திற்கு இளநீர் இரண்டு, அதிசீக்கிரம் தேவை; உதவவேண்டும்! என்ன கேட்டாலும் கொடுத்து விடுகிறேன் என்று கெஞ்சுகிறார். அந்த சமணர் வீடு கோயி

கண்டங் கறுத்துநின்ற காரணத்தைப் பாரேனே
தொண்டர் குழுவில் நின்ற தோற்றமதைப் பாரேனே

துக்கு சமீபத்தில் உளது; அவர் வீட்டுப் புழக்கடையில் தென்னை மரங்கள் உண்டு என்று தெரிந்துதான் கேட்கிறார்.

ஹி ஹி ஹி என்று பல்லிளித்தார் சமணர். 'வேண்டியபோ தடியர் வேண்டிய போகமது வேண்ட வெருது உதவும்' உங்கள் பெருமான், தன் அபிஷேகத்திற்கு இரண்டு இளநீர் தாராதோ; கலங்கும் உம்மைக் கண்டு தயை காட்டாத கந்தனும் ஒரு கடவுளோ என்ற அவர் ஏளனப் பேச்சு, கேட்க சகிக்கவில்லை. தெய்வ சோதனையோ? இளநீர்க்கு என்ன வழி? அபிஷேக காலம் தவறுகிறதே என்று மனமுடைகிறார் பக்தர்.

'குமரா! ஓ...என்று கோஷிக்கிறது கடல்' என்று முருக பக்தர்கள் சொல்லக் கேட்டுளன்: அது மெய்யானால், கடலையே கேளும்! இளநீர் இருக்கு மிடத்தை, அது கனிவுடன் உமக்குக் காட்டித் தரும் என்று நோக நோகப் பேசுகின்றார் சமணர்.

என் அசட்டுத்தனத்தால் இவ்வளவு விளைவு; தெய்வ நிந்தனை செவி நிரம்பக் கேட்டாயிற்று. என் குற்றத்திற்கு மரண தண் டனைதான் தகுதியென்று ஒரு முடிவிற்கு வந்தது மனம்.

ஆ! அதோ கடலை நோக்கி ஓடுகிறார்!

அன்பர் அணுக அணுக, ஆரவாரிக்கிறது அந்தக் கடல். ஒன்றன்பின் ஒன்றாய் அலைகள் உருண்டோடி வருகின்றன.

என்ன வியப்பு! அலைகளின் மேல் அசைந்து ஆடி வருகின் றன இரு இளநீர்கள். மணிபுடைத்த பெரிய உருவுள அவ்விரண் டையும் கண்ட அன்பர், மெய்ம்மறந்து, முருகா! முருகா! உன் கருணையே கருணை என்று உரக்கக் கூவினர். அனைவரும் கடலை நோக்கி அதிசயித்தனர். அலைகளினால் தள்ளுண்டு, கரையேறி, விரைந்து உருண்டு, உரிய நேரத்தில் சந்நிதி சார்ந்த இரு இளநீரை யும், தொடர்ந்து ஓடிவந்த அன்பர் கைகுவித்து கும்பிட்டார். யாவரும் சொல்லொணா வியப்பெய்தினர்.

திருச்செந்தில் துரைக்கு அரோஹரா என்ற பேரொலி, விண் ணெலாம் எதிரொலித்தது. இளநீர் அபிஷேகம் இனிது நடந்தது.

நற்பருவ மாக்குமந்த நாளெனக்குக் கிட்டாதோ
எப்பருவமும் கழன்ற ஏகாந்தங் கிட்டாதோ

இவ்வளவையும் கண்ட அமணர் கல்லான மனமும் கரைந்தது. நடுங்கியது அவர் உடல். தம சமயப் போர்வையை உதறினர். கலியில் கண்கண்ட தெய்வம் திருச்செந்தில் செம்மலேதான் என்று வாய்திறந்து உளம் குளிர்ந்து ஓதினர். திரிசுதந்தரரிடம் திருநீறு பெற்றார். தம் பொருள்களை எல்லாம் அறுமுகனுக்கே அர்ப்பணித்தார். பரம பக்தரானர். பலகாலம் பணி செய்தார். பணியின் பயனாக, பரமாநந்தம் எய்தினர். முருக பக்த சமணர் என்பது அவர் பெயர்.

இரண்டு எருமை, இரண்டு இளநீர், சமண பௌத்த இருவர், பூக லோகாயதர் முதலினோரை முன்னிலையாக்கி நிகழ்ந்திய இம்மூன்று திருவிளையாடல்கள், இப்பாட்டில் இருக்கின்றன. இந்நாள் விளையாடி யென்ற சொற்போக்கால், முன்கூறிய அருளாடல் இரண்டும் பகழிக்கூத்தர் காலத்து நிகழ்ந்தவை. முன்னாள்விளையாடி என்ற குறிப்பால், பின் உரைத்த திருவிளையாடல், மிகப் புராதனமான ஒரு காலத்து நிகழ்ந்தது என்பதும் உணரத்தகும். கச்சிப்பதி அற்புதங்கள் போல், செந்திலின் கல்லெருமையும் கலியாட்சி முதிர்ந்த இன்று கண்ணிற்கு மறைந்தது.

இந்த அற்புத வரலாற்றைப் பகழிக் கூத்தர் பின்வரும் பிள்ளைத் தமிழில் பாடுகின்றார்; அற்புதமான அப் பாடலைப் படித்துப் பாருங்கள் !

(4) பெருமையுடன் நீள் தலைத் திருவர்பர சமயமும்
பேதம் பிதற்றி விட்ட
பிறைமருப் புக்கரும் 'பகடுமுந் நீரில்'
பிழைத்துநீள் கரையில் ஏறப்
பொருவரும் சந்நிதியில் எய்துவது போல்மணி
புடைக்குமிள நீரிரண்டு
'புணரியின் மிதந்துசந் நிதியேற இந்நாள்'
பொருந்தவிளை யாடி முன்னாள்
இருதிரையி னில்சந் தனக்கொடி மரத்தினை
இழுத்துவரும் எருமை யேற்றை

வரக்கிறந்து நின்ற மவுனமது கிட்டாதோ
நாக்கிறந்து நிற்குமந்தத் தற்சுத்தி கிட்டாதோ

எப்பொழுதும் முநியகல் 'பகடாக உலகத்தில்
யாவரும் காண என்று
திருவுளம் மகிழ்த்து திரு விளையாடல் கண்டநீ
திருசிறுதேர் உருட்டி யருளே
சேவல் பதாகைக் குமாரகம் பீரனே
சிறுதேர் உருட்டி யருளே.

இந்தப் பிள்ளைத் தமிழ் விரிவான உரையுடன் அமிர்தவசனி காரியாலயத்தில் கிடைக்கும்.

GOD AND MAN

There is an ineffaceable chord that links together God and man. At one end of the chord, there is God. There man is seen in all his divine qualities; and limitations are in the hiding even as his weaknesses. At the other end there is man, his weaknesses and limitations are very much to be seen. The God in man is in the hiding even as his divine qualities. The chord is the chord of love, of bhakti, of mercy, of benediction. Man can see man through God, and God through man. Realised saints see God in man—nay in all creatures, and man in God. The human approach to God and the divine approach to man are both essential for true realisation. Immanent God is in everything. He is everywhere. Manifest God is the making of divine grace or human love and prayer. Isavasya Upanishad declares 'Isavasyam idam sarvam'—(the Lord resides everywhere.) God's work is

creation and He lives in His work. Creation is but a part of Him.

'Esthu sarvani bhootani
Atmaneva anupasyathi
Sarva bhooteshu chatmanam
Thathona vijugupsathe'

Even so,

'Yesmin sarvani bhootani
Atmyva booth vijanathaha
Tatra ko mohaha, Kas cokaha
Ekatvam anupasyataha.'

The man who sees the creatures of the world as the tabernacles of God and who sees all the creatures of the cosmos in God—it is he that attains sama darshanam—it is he that attains *realisation* of the true unity with God. That is the place where God, man, love and grace meet in the integrity of universal joy. Bhakti and bhajana, worship and *meditation approach* to the Divinity. Universal love in the spirit of abedha—non-differentiation treating all life as one, as one's own, is the expression of the divine approach to man. The chord of love that knits man to *God and God to* man has *to be* kept up in the live purity of communicability at all times. Egotism and desire interrupt the passage of divine mercy and *human* love to and fro. The abiding thought of God and the overflowing *flow* of *universal* love will destroy the disturbing corrotions of the chord between God

and man. In the realisation of this continuous contact and communication, man becomesthe mouthpiece of God, even as he becomes the messenger of heaven.

Love! Unify! Become established in the might of God. Lord Tennyson sang "my strength is the strength of ten, because my heart is pure." May we not say "my might is the might of the universe because my heart has become the abode of the lord."

(*Thiruppugal Mani*)

சந்தாதாரர்களுக்கு நினைவூட்டுகிறோம்

★

தங்களுடைய நந்தன வருஷத்திய சந்தா, வருகிற பங்குனி இதழுடன் முடிவடைகிறபடியால், சித்திரை முதல் தொடர்ந்து பத்திரிகையைப் பெற விரும்பும் நேயர்கள், சித்திரை மாதத்திற்கு முன்னதாகச் சந்தா தொகை ரூ 2—4—0 யும் தயவு செய்து அனுப்பி வைக்கவும்.